பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது என்றால்




சொலிட்

பம்பையே வாங்குங்கள்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

When, only The best is Good Enough



Buy Solide Pumps

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ வருடம் ஆடி மீ 10 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 10 ( 25 - 07 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 140

# ஈழத் தமிழர்கள் இந்தியா செல்ல புதிய கட்டுப்பாடு

## இரண்டு வாரங்களுக்கு மேல் விசா அனுமதியில்லை

— அலுவலகச் செய்தியாளர்: எஸ். ராஜ்குமார் —

யாழ்ப்பாணம், ஜூலை 25

இலங்கையிலிருந்து தமிழர்கள் இந்தியா செல்வதற்கு குறிப்பாக தமிழகம் செல்வதற்கு புதிய கட்டுப்பாடு விதிக்கப் பட்டிருக்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழர்களுக்கு இரண்டு வாரங்களுக்கு மேல் விசா வழங்குவதில்லை என்ற புதிய கட்டுப்பாட்டை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் கடைப்பிடித்து வருகிறது.

இந்தக்கட்டுப்பாடு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படாத போதிலும், நடைமுறையில் தமிழர்களுக்கு இரண்டு வாரங்களுக்கு மேல் விசா வழங்காமல் இருக்கப் பார்த்துக் கொள்ளப்படுகிறது.

புனித ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்ல விண்ணப்பிப்போருக்குக் கூட இரண்டு வார விசாவே வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த சில நாட்களாகவே இந்தப் புதிய கட்டுப்பாடு உத்தியோகப் பற்றற்ற முறையில் அமுல் நடத்தப்பட்டு வருகிறது.

விசாக்காலம் குறைக்கப்பட்டுள்ளதோடு மட்டுமல்லாமல், தமிழ்ப் பயணிகள் கொழும்பு—இந்தியா, இந்தியா—கொழும்பு என்ற ரீதியில் இருவழிப் பாதைக்கான டிக்கட்டுகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

விமானமூலம் இந்தியா செல்லும் ஒருவர் விமானமூலமே நாடு திரும்ப வேண்டும் எனக் கட்டாயப்படுத்தப்படுவதாகவும் அறிய வந்தது.

விமானமூலம் பயணம் செய்யும் ஈழத்தமிழர்கள் பலர் இந்தியாவில் அகதிகளாகப் பதிவு செய்து அங்கிருந்து கப்பல்மூலம் நாடு திரும்புவதைத் தடுப்பதற்காகவும், அகதிகளுக்கான கப்பல் சேவையை வியாபாரப் பயணத்துக்குச் சிலர் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காகவுமே இந்தப் புதிய கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப் படுவதாகச் சொல்லப் படுகிறது.

இந்தியா செல்வதற்குரிய விசாவிற்காக நாளாந்தம் நூற்றுக் (8ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளியவளையில் கண்ணியில் இருந்து சேதமின்றி தப்பிய பஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 25

முள்ளியவளைப் பகுதியில் நேற்று நடந்த கண்ணிவெடிச் சம்பவத்தில் வ. பி. போ. சபையின் கோண்டாவில் சாலைக்குச் சொந்தமான பஸ் ஒன்று மயிரிழையில் சேதமின்றித் தப்பியது.

இம்மாதம் 10ஆம் திகதி புதுக்குடியிருப்பில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிக்கிய அந்த பஸ்ஸே நேற்றுத் தப்பியது.

இச்சம்பவம் பற்றி அறியவருவதாவது:-

பிரஸ்தாப பஸ் நேற்று (8ஆம் பக்கம் பார்க்க)

## அனுரா விரும்பும் அதிகாரப் பரவலாக்கம்!

கொழும்பு, ஜூலை 25

அதிகாரப்பரவலாக்கல் திட்டம் ஒன்றை எதிர்கால சுதந்திரக் கட்சி அரசு அமுல்செய்யும். ஆனால் மாகாணசபைத் திட்டம் ஊடாக அது செயல்படுத்தப்படமாட்டாது.

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

நிர்வாகம் பரவலாக்கப் படவேண்டும் என்பதை நாம் அங்கீகரிக்கின்றோம். நாட்டின் ஒற்றையாட்சி முறையைப் பணயம் வைத்து நிர்வாகப் பரவலாக்கல் செய்யமாட்டோம்.

அதிகாரப்பரவலாக்கல் இரண்டுவகையாக அமையமுடியும். வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு ஒருவிதமாகவும் ஏனைய மாகாணங்களுக்கு வேறு விதமாகவும் (8ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

25 - 7 - 1988

ஆடி - 10

திங்கட்கிழமை

சுபநேரம்:

12-02முதல் 01-32வரை

ராகுகாலம்:

07-32 முதல் 09-02வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஏகாதசி விரதம்

## மாலை 6 மணியுடன் ஊரடங்கு பஸ் சேவைகள் பி.ப.4-30 மணியுடன் நிறுத்தப்பட்டு விடும்

யாழ்ப்பாணம், ஜூலை 25

பருத்தித்துறை, கொடிகாமம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் பஸ்கள் மாலை நான்கு மணியுடன் நிறுத்தப் படும்.

ஏனைய இடங்களுக்குச் செல்லும் பஸ்கள் மாலை 4-30 மணியுடன் நிறுத்தப்படும்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் உயரதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது அமுல்படுத்தப் பட்டிருக்கும் மாலை ஆறு மணி தொடக்கம் காலை ஆறு மணி வரையான ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும்வரை மேற்குறிப்பிட்ட நேரங்களில் பஸ் சேவைகள் நிறுத்தப்படும்.

வெளி மாவட்டங்களுக்கான பஸ்சேவைகள் அனைத்தும் காலை ஏழு மணியளவில் ஆரம்பிக்கப்படும் எனவும் அந்த அதிகாரி கூறினார்.

(ஓ-10)

### முச்சந்தி முரளி



இல்லை, இல்லை எண்டு கனதடவைகள் சொன்னால் இருக்குது எண்ட மாதிரியும் முடியலாம் உந்தச் சர்வசன வாக்கெடுப்புக் கதை!

## இன்று புனித யாகப்பர் திருநாள்

குருநகர், ஜூலை 25

புனித யாகப்பர் (சந்தியோகுமையோர்) ஆலய திருநாள் கூட்டுத் திருப்பலி இன்று திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

பாடல் கூட்டுத் திருநாள் திருப்பலிப் பூசையில் மறைவட்ட முதல்குரவர் வண. பிதா மைக்கல்சாமி கலந்து சிறப்பிப்பார்.

ஊரடங்கு நேரத்தை அனுசரித்து சொரூப ஊர்வலம் பிற்பகல் 2-30 மணிக்கு ஆரம்பமாகுமென பங்குத்தந்தை வண. பிதா பி. எம். இம்மானுவேல் அடிகளார் தெரிவித்தார்.

(ஓ-51)

[சிறப்பிதழ் உள்ளே]

## காரைநகரில் 2 நாட்களாக ஹர்த்தால்

காரைநகரில் கடந்த இரண்டு நாட்களாக ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

அமைதிப்படையின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு மரணமடைந்த சூரி என்ற இளைஞருக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாகவே இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஹர்த்தால் நடவடிக்கை காரணமாக காரைநகரில் உள்ள கடைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

காரைநகர் — யாழ்ப்பாணம் பஸ்சேவைகள் கடந்த இரண்டு நாட்களாக நடைபெறவில்லை.

யாழ்ப்பாணத்தில் இருந்து மூளாய்வரை மட்டுமே போக்குவரத்துச் சேவைகள் நடைபெற்று வருகின்றன. கிழக்கு ரேட்டால் இரண்டொரு வாகனங்கள் மட்டும் சனிக்கிழமை சேவையில் ஈடுபட்டதாகத் தகவல் கிடைத்தது.

அமைதிப் படையினரின் ரோந்துப் பணிகள் காரைநகர்ப் பகுதியில் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன. (ஓ-10)

## ஊரடங்கில் மாற்றமில்லை

யாழ் குடாநாட்டிலும் கிளிநொச்சியிலும் மாலை 6 மணிதொடக்கம் காலை 6 மணிவரை ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல்வரை தொடர்ந்து அமுலில் இருக்குமென இந்திய அமைதிப்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-எ)

# தமிழர் அபிலாஷைகளை இந்தியா புரிந்துகொள்ளவில்லை

## தொண்டா சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 25

தமிழரின் அபிலாஷைகளை இந்தியா சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. தமிழரின் அபிலாஷைகள் பற்றிய இந்தியாவின் நிலைப்பாடு தமிழரின் உண்மையான தேவைகளுடன் ஒத்துப்போகவில்லை.

அமைச்சர் தொண்டமான் முன்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு "சண்டே டைம்ஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அமைச்சர் தொண்டமான் மேலும் சொன்னதாவது;

அமைதி உடன்பாடு, மாகாணசபைச் சட்டம் ஆகியன தமிழரின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக அமையவில்லை. அதனால்தான் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீண்டும் சண்டை ஆரம்பித்துள்ளது.

தமிழரின் உண்மையான அபிலாஷைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. வடக்கு-கிழக்கு இணைப்பு, (8 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு வேளையில் நடமாடியோருக்குத் 'தண்டனை'

யாழ்ப்பாணம், ஜூலை 25

ஊரடங்கை மீறி வீதிகளில்நடமாடியோர் அமைதிப் படையினரின் 'தண்டனை'க்கு உள்ளாகினர்.

நேற்று முன் தினம் மாலை யாழ்நகரின் பல இடங்களிலும் 'தண்டனைகள்' வழங்கப்பட்டன.

சனிக்கிழமையும் மாலை 6 மணிக்கே ஊரடங்கு அமுலானது தெரிந்ததே. எனினும் மாலை சுமார் 6 10 மணியளவில் வீதிகளில் நடமாடியவர்கள் சில இடங்களில் சிறிது நேரம் இருத்தி வைக்கப் பட்டனராம்.

சிலருக்கு வேறுவிதமான 'தண்டனை'யும் வழங்கப்பட்டு அவர்கள் அனுப்பிவைக்கப் பட்டனராம்.

இதேவேளை நேற்று முன்தினம் யாழ்நகரில் ஊரடங்கு நேரத்தில் (மாலை 6.15 அளவில்) ரயில்வீதிவழியாக வந்துகொண்டிருந்த இருவரை அமைதிப் படையினர் அழைத்த போது அவர்கள் ஓடியதாகவும்—

அதனைத்தொடர்ந்து படையினர் சுட்டதாகவும் அறியவந்தது.

ஊரடங்கு நேரம் ஆரம்பமாவதற்கு முன்னரே மக்கள் வீடுகளுக்குச் சென்றுவிடவும், வீதிகளில் செல்வதைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும் மக்கள் பழகிக் கொள்ளவேண்டும் என்று அமைதிப்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-க)

## ஒப்பந்தம் கைச்சாத்தாகிய 29-ல் ஹர்த்தால் அனுஷ்டிக்க புலிகள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 25

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைத் தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்கள் என்று உலகத்திற்கும், இந்தியாவுக்கும் உணர்த்து முகமாக—

ஒப்பந்த ஒருவருட நிறைவு நாளான எதிர் வரும் 29ஆம் திகதி ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு—

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க அரசியற் பிரிவு வேண்டுகோள் விடுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு:—

எமது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!

அளப்பரிய தியாகங்களாலும் அர்ப்பணிப்புக்களாலும் கட்டி வளர்க்கப்பட்ட எமது தேசிய விடுதலைப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த வேளையில் இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு எந்த ஒரு தீர்வையும் தந்து விடவில்லை. தனது பிராந்திய நலன்களைப் பேணுவதற்காக இலங்கையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்குதமிழினத்தை பலிக்கடாவாக மாற்றும் இந்தியாவின் செயற்பாடே இவ்வொப்பந்தம்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஓராண்டு நிறைவேறும் இத்தருணத்தில் தமிழ் மக்கள் முன்னர் இருந்ததை விட மோசமான துன்பங்களுக்கும், இடைஞ்சல்களுக்கும் ஆளாகிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்கள் இந்திய இராணுவத்தின் குண்டுகளுக்கு இரையாக்கப் பட்டுள்ளன. கோடிக்கணக்கான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. தமிழ்ப்பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டுள்ளனர்.

எமது தமிழ் பாரம்பரிய பிரதேசங்கள் சிங்களவர்களிடம் பறிபோய்க்கொண்டிருக்கின்றன. தமிழீழமெங்கும் இந்திய இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலைமையில் தொடர்ந்தும் தமிழினத்தை இனவெறிபிடித்த சிங்கள அரசின்கீழ் (8 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று ஹஜ்ஜுப் பெருநாள்

யாழ்ப்பாணம், ஜூலை 25

இன்று ஈக்-உல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாளாகும்.

நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள முஸ்லிம் பெருமக்கள் இன்று வெகு சிறப்பாக ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடுகின்றனர்.

(ஓ-9)

# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க சர்வசன வாக்கெடுப்பு நடத்தும் எண்ணம் அரசுக்கு கிடையாது

## அமைச்சருக்கு ஜனாதிபதி பேட்டி

## தாக்கவில்லை என்கிறது இ. அ. படை

யாழ்ப்பாணம், ஜூலை 25

சுழிபுரம், மூளாய், பண்ணாகம், வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் இம்மாதம் 17ஆம் 18ஆம் திகதிகளில் நடத்திய தேடுதலின் போது.—

மக்கள் எவரும் தாக்கப்படவில்லை என்று—

பலாலியில் உள்ள இந்திய அமைதிப்படை அலுவலகம் விடுத்திருக்கும் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கி (8ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு, ஜூலை 25

சர்வசன வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் அரசுக்குக் கிடையாது என்று திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்றுத் தெரிவித்தார்.

ராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் நேற்று ஜனாதிபதி ஜெயவர்த்தனவைப் பேட்டி கண்டார்.

அப்போதே திரு. ஜெயவர்த்தன இதனைத் தெரிவித்தார்

அவர் மேலும் சொன்னதாவது;

சர்வசன வாக்கெடுப்பு மூலம் ஆட்சிக்கு மீண்டும் வருவது எமது நோக்கம் அல்ல.

மூன்றாவது தடவையாக ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுவது பற்றி நான் இன்னும் தீர்மானிக்கவில்லை.

பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெறவேண்டும். அதற்கான திகதியைச் சட்டத்துக்கு இணங்க ஜனாதிபதி தீர்மானிப்பார்.

பொதுத் தேர்தல் திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை

மாகாண சபைகளை, அமைதி உடன்பாடு காரணமாக மட்டும் அரசு நிறுவவில்லை.

காலஞ்சென்ற பண் (8ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

GOLDI Sausages எல்லாவகையான Sausages மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு சழிவு தரப்படும். NallurFarm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (C.5624)

**WALL PAPER FOR SALE**

உயர்ந்த ரக இத்தாலிய நாட்டு (Italy) சுவருக்கு ஒட்டும் வர்ண டதாசிகள் இரண்டு டிசைன்களில் விற்பனைக்குண்டு. சழுவி பாவிக்கக்கூடியவை. விபரங்கட்கு T. ஞானகுரு, 104/4, அத்தியடி குறுக்கு வீதி, அத்தியடி. யாழ்ப்பாணம். (C 5908)

**88 Dec. English New Syllabus**

ஆங்கிலம் புதிய பாடத்திற்கமைய நாலு மாத பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 27-7-88 நேரம் மாலை 6.30-7.30 நாட்கள்: செவ்வாய், புதன், வியாழன், S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (5119)

**TYPE WRITER**

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna, Samy & Co Shabra அருகாமையில். (C5300)

**இலங்கைப் புவியியல்**

A/L வகுப்புக்குரிய இலங்கைப் புவியியல் வெளிவந்துவிட்டது. அபிவிருத்திப் புவியியல், எறியங்கள் என்பனவற்றின் புதிய பதிப்புகள் விற்பனையாகின்றன. ஆக்கியோன்: க. குணராசா M. A. பிரபல புத்தகசாலைகளில்கிடைக்கும். (5104)

## தேவை

**வள்ளம் தேவை**

17½ அடி இளைநார் (Fibre Class) வள்ளம் தேவை. விலை விபரங்களுடன் நேரில் அல்லது கடிதமூலம் உடன் தொடர்பு கொள்ளவும்; ந. அன்புராஜா, நவாலி கிழக்கு, மானிப்பாய். (5388)

**சிங்கப்பூருக்கு பணிப்பெண்கள் தேவை**

சிங்கப்பூருக்கு பணிப்பெண்கள் தேவை. சம்பளம் 3000/- வழங்கப்படும். வயது 20 முதல் 35 வரை. பாஸ்போட் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். முதல் இரண்டு வருடமும். தேவைப்படும் பொழுது 4 வருடங்களுக்கு நீடிக்கலாம். தொடர்பு:- S. யோகரட்ணம், 96, ஆடியபாத வீதி, கேணியடி, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி. (5386)

## மணமகன் தேவை

33 வயதுடைய செவ்வாய்க் குற்றமுள்ள நோர்வேயில் வதியும் இந்து ஆசிரியைப் பெண்ணிற்கு மணமகன் தேவை No 302, C/o உதயன், யாழ்ப்பாணம். (5383)

**போட்டிப் பரீட்சை**

ஆண்டு 5 புலமைப் பரீட்சைக்கான முன்னோடிப் பரீட்சை 01-08-1988 காலை 9-00 மணிக்குநடைபெறும். விண்ணப்ப முடிவுத் திகதி 25-07-1988 Modern Education Centre, Karaveddy. (4950)

**படையினர் வாபஸ்**

வடமராட்சி ஜூலை 25 பொலிகண்டி முகாமிலிருந்து இந்தியப் 'பரா' படையினர் கடந்தபுதன் கிழமை முற்றாக வாபஸ் செய்யப்பட்டனர்.

## பிறந்த நாள் வாழ்த்து



செல்வி சிந்து (25-07-1988)

வல்வெட்டித்துறை சிவன் கோவில் மேற்கைச் சேர்ந்த குகப்பிரசாதன் ராஜேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வி சிந்து தனது இரண்டாவது பிறந்த நாளை அண்ணாக்கள் கேதீஸ், இளங்கோ ஆகியோருடன் P.W.D. ரோட், முல்லைத்தீவில் கொண்டாடுகின்றார், இவரை அப்பா, அம்மா, ஐயா, அம்மாச்சி, பெத்தாச்சி, சித்திமார், சித்தப்பாமார், மாமாமார், மாமிமார், அத்தான்மார், மச்சாள்மார், பெரியம்மா, அக்காச்சி, ராஜ் அண்ணா, மற்றும் உற்றார், உறவினர் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர். (C 5926)

---

**THE EXPRESS INSTITUTE KOPAY**

**A/L 90**

**பொருளியல் - கணக்கியல்**

வகுப்புகள்

செவ்வாய், வியாழன் நாட்களில்

**3-00 P. M. - பொருளியல்**

BY திரு. கிருஷ்ணனந்தன்

**4-00 P. M. கணக்கியல்**

BY திரு. மரியதாஸ்

(C5898)

---

# ★ விக்னு ★

## டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L பிரிவு 5 Day Classes** (8-30 — 1-30)

**ஆரம்பம்: 27-7-88**

முக்கிய குறிப்பு:-

1. கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்.
2. மாணவர்களின் நலன் கருதி O/L பயிற்சிப் பரீட்சை எம் நிறுவனத்தில் மட்டுமே இலவசமாக நடாத்தப்பட்டது தெரிந்ததே. இவ்வாறு ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படும்.

(C-5836)

---

# பிரயாண ஒழுங்குகள்

**SAUDI OPERATION & MAINTENANCE COMPANY LIMITED**

S. O. M. C

| | | |
|---|---|---|
| 1. | Hospital Cleaners Male | 456 SR |
| 2. | Hospital Cleaners Females | 456 SR |
| 3. | University Cleaners Males | 456 SR |
| 4. | Masons | 600 SR |
| 5. | Carpenters | 600 SR |
| 6. | Drivers | 700 SR |
| 7. | A. C. Mechanics | 650 SR |
| 8. | Electricians | 650 SR |
| 9. | Plumbers | 650 SR |
| 10. | Mechanics | 650 SR |

AGE 21 — 40 வரை

Air Port Taxம், Medical Feesம் அறவிடப்படமாட்டாது

முற்பணம் அறவிடப்படமாட்டாது.

பிரயாணம் செய்ய கடவுச்சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்டபின் பிரயாணம் செய்யத் தவறின் கடவுச்சீட்டு திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

தலைமைக் காரியாலயம்:

**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

கிளை 1. **கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
குப்பிளான் சந்தி,
குப்பிளான்.

கிளை 2: **கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
வன்னிச்சி கோவிலடி,
வல்வெட்டி.

(C 5907)

---

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மாரிமுத்து சிவராசா**

[Store Keeper, Dockyard Ltd. Colombo]

தோற்றம்: 28-11-1948   மறைவு: 25-7-1983

வேலை சென்று வீடு திரும்பி வருவீரென்று
பார்த்திருக்க,
சிங்களக்காடையர்களின் கைகளில் அகப்பட்டு
வெந்தீயில் போட்டனரே
நீர் எம்மை விட்டுப் பிரிந்து
ஐந்து வருடங்களாகியும் உம்மை என்றும்
பாசத்துடன் நினைவு கூருகின்றோம்.

உம் நினைவால் வாடும்.
அம்மா, மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், மைத்துனர்மார்,
சகோதர, சகோதரிகள்.

நாவலர் பாடசாலையடி,
கோப்பாய் தெற்கு. (5282)

---

## 5 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



யாழ். அரியாலையூர்

**திரு. அழகராசா ராஜன்**

ஆண்டவன் படைப்பு: 4-9-1963   அநியாய அழிப்பு: 25-7-1983

யாழ்/செயலகத்தில் கடமை புரிந்து கொண்டு இருக்கும் பொழுது விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் கொடூர அரக்கர்களால் கொலை செய்யப்பட்டார்.

இவரின் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

தந்தை, தாய்;
சகோதரி, சகோதரர்கள்.

நெடுங்குளம் ரோட்,
அரியாலை, யாழ்ப்பாணம். (5133)

---

## 5 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



**விஸ்வலிங்கம் கந்தசாமி**

(செல்வம் ஸ்ரோர்ஸ், களுத்துறை)

தோற்றம் 25. 3. 1931   மறைவு 25. 7. 1983

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத் துயில் கொண்ட எமது அன்புத் தெய்வமே! எம்மை விட்டுப் பிரிந்து ஐந்து ஆண்டுகள் சென்றாலும் உம்மை நாம் ஒரு கணமும் மறக்கவில்லை. தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்

வேலணை மேற்கு,
வேலணை. (5349)

---

பரம்பரையில் உள்ளவரும், றெஜிஸ்ராராக அரசாங்கப் பதிவுள்ளவரும், வடமராட்சியில் பிரசித்தி பெற்றவருள் ஒருவருமான காலஞ்சென்ற வைத்தியர் **சக்கரியாஸ்,** அவரின் விருப்பப்படி 3 விசேஷித்த அனுபவத்தில் கைகண்ட மருந்துகளை அவரின் மகனும், சிஷரும், ஆயுர்வேத கல்லூரியில் படித்தவருமானவர் பிரசித்தப்படுத்துகிறார். முதலாவதாக — **சக்கரியாஸ் எண்ணெய்** எவ்வகைப் புண்களுக்கும், கட்டுகளுக்கும் உகந்தவை. பரீட்சித்துப் பாருங்கள்.

போத்தல் ரூபா 2/5) மட்டுமே.

**சக்கரியாஸ் இண்டஸ்றீஸ்**

63, அரசடி ஒழுங்கை, அரியாலை.

(5268)

---

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சிவசுப்பிரமணியம் சிவநாதன்**

அன்னை மடியில்: 20-5-1954   அன்னியன் பிடியில்: 25-7-1983

பாசமலராய் மலர்ந்து அறிவால் எங்கும் மணம்வீசி அன்பால், பண்பால் உரிய நற்குணத்தால் உலகில் எல்லோர் உள்ளத்திலும் உறைந்து திடீரென உதிர்ந்த மலராகிவிட்ட எமது அன்புச் செல்வமே! கூவ இருந்த குயில் கூவாமல் போனதுபோல், கோடி அழகு மலர் இடை நடுவில் வாடுதல் போல், ஆவல் நிறைந்த மகன் இடைநடுவிற் போனானே!

அப்பா கட்டியகோட்டை இடிந்து
விழுந்ததடா
அம்மா அழுத கண்ணீர் ஆறாய்ப்
பெருகுதடா
உடன் பிறந்தோரின் எண்ணத்தைக்
கரையவைத்தாயடா
நண்பரின் பாசத்தை அழிய
வைத்தாயடா

பண்பின் பிறப்பிடமே, பாசத்தின் உறைவிடமே, அன்பின் அணிகலனே உன்நினைவு என்றும் பாசமுள்ளதாயினதும் நேசமுள்ள சகோதரங்களினதும் நெஞ்சை விட்டகலாது.

தாய், சகோதரர்கள்,
மைத்துனர்மார், மருமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

வேலணை மேற்கு,
வேலணை. (281)

---

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



**பூபாலசிங்கம் ஜெகதீஸ்வரன்**

**(ஜெயா, கணேஸ், அம்மான்)**

ஈழ மண்ணில் 15. 12. 1965   ஈழவர் இதயங்களில் 5. 8. 1987

திதிநாள் 25-7-88

எமது அன்புச் செல்வன் ஜெயாவே!
மாறாத அன்பில் எல்லோரையும்
மகிழ வைத்த எம் தெய்வமே
தீராத துயருடனே எல்லோரையும்
வாட வைத்து
மீளாத்துயில் கொண்டு
ஆறுதல் அடைய காலன் கையில்
சரண் அடைந்தீரோ!

உன் திரு முகத்தை எப்போ காண்போம்? உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

உன் பிரிவால் வாடும்
அம்மா, அண்ணன்மார், அண்ணிமார்,
மாமன் மாமிமார், மக்கள் மருமக்கள்,
உற்றார் உறவினர்கள்,
உனது அன்புத் தோழர்கள்!

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (5112)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டிமணி, ஜெகன் உட்பட 53 தமிழர்களை பலி கொண்ட வெலிக்கடைப் படுகொலைகள்

1983 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் திகதியும், 27 ஆம் திகதியும் வெலிக்கடைச் சிறையில் சிங்கள இனவெறியர்களினால் நடத்தப்பட்ட படு அநாகரிகமான தாக்குதல்களில் தமிழீழப் போராளிகளான குட்டிமணி, ஜெகன் உட்பட 53 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளுடன் உருப்பெற்று வந்த தமிழீழப் போராட்டம் 1983க்குப் பின்னர் உக்கிரம் அடைந்ததுக்கு வெலிக்கடைப் படுகொலைகளும் ஒரு காரணம் ஆகும்.

வெலிக்கடைப் படுகொலைகள் நடந்த ஐந்தாவது துக்தினம் இன்றாகும் அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

**நன்றி: லண்டனில் இருந்து வெளிவரும் 'சிந்து'**

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் திகதி. முற்பகல் 11.30 மணியிருக்கும்.

நாங்கள் இருந்த ''ஷெல்'' இல் ஒரே பரபரப்பு. இனம் புரியாத பயம் எல்லோர் மனங்களிலும் படர்ந்திருந்தது. காரணம், முதல் நாள் இரவு வடபகுதியில் போராளிகளின் நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் பல சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்ட செய்தி, சிறைச்சாலையின் இனவாத ஜெயிலர்களால் 'துவேஷ' வார்த்தைகளால் தெரிவிக்கப்பட்டிருந்தமையே.

### விபரீத உணர்வு

சிங்கள ஜெயிலர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்குள் ஏதேதோ இரகசியம் பேசியவாறு இருந்தமை உள்ளூர எமக்குப் பீதியை ஏற்படுத்தியிருந்தது. என்ன நடக்குமோ, எனப் பயந்த வண்ணம் இருந்தோம். உணவு பரிமாறும் இடத்திற்குச் செல்லக்கூடப்பலர் விரும்பவில்லை. ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது போல் என் மனதில் தோன்றியது.

வெலிக்கடைச் சிறை பிரிட்டிஷ் அரசாங்கக் காலத்தில் கட்டப்பட்ட ஒரு கட்டடமாகும். ''சப்பல் சட்டடம்'' எனப்படும் இரு மாடிகளைக் கொண்ட இக் கட்டடத்தின் கீழ்ப் பகுதி, ஏ.பி.சி.டி. என்னும் 4 பிரிவுகளைக் கொண்ட, ஹிட்லரின் சுவேஸ்திகா வடிவத்திலும் அமைக்கப்பட்டிருந்தன. கீழ்ப் பகுதியிலேயே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த நாம் இருந்தோம். மேல் மாடிக் கட்டடத்தில், பிதா சிங்கராயர், டாக்டர் தர்மலிங்கம், டாக்டர் ஜெயதிலகராஜா, மகாவைமசேசன், விரிவுரையாளர் நித்தியானந்தன், எஸ். ஏ. டேவிட், டாக்டர் ராஜசுந்தரம், பிதா சின்னராஜா ஆகியோர் அரசியல் கைதிகள் எனும் அந்தஸ்தில் சிறை வைக்கப்பட்டிருந்தனர்.

கீழ்ப்பகுதியின் விசேட நான்கு பிரிவுகளில் 'பி' பிரிவிலேயே குட்டிமணி, தங்கதுரை ஆகியோர் தண்டிக்கப்பட்ட கைதிகளுக்குரிய அந்தஸ்தில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி அறைகளில் பூட்டப் பட்டிருந்தனர். 'சி' பிரிவில் பனாகொட இராணுவ முகாமில் இருந்து கொண்டு வரப்பட்ட 28 தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

'டி' பிரிவில் 29 பேர் தனித்தனி அறைகளில் பூட்டப்பட்டிருந்தனர். பிரிவு 'ஏ' சிங்கள விளக்க மறியல் கைதிகளால் நிரப்பப்பட்டிருந்தது.

### இனக்கலவரம்

83 ஆம் ஆண்டு 25 ஆம் திகதி பிற்பகல் 2.30க்கு ஊரடங்குச் சட்டம்பிறப்பிக்கப்பட்ட நேரம். நாடெங்கும் இனக்கலவரம் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், தீ வைப்புகளில் சிங்கள குண்டர்

## சிங்கள இனவெறியின் உச்சக்கட்டம்; தமிழீழப் போராட்டத்தில் திருப்பு முனை

கள் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள், அன்று பிற்பகல் இரண்டு மணியில் இருந்து ஊரடங்குச் சட்டம் என அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது. ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட சிறிது நேரத்தின் பின் சிறை அதிகாரிகள் சிலர் தமது திட்டத்தை மிகவும் நுட்பமாக நிறைவேற்றத் தொடங்கினார்கள். திட்டமிட்டபடி இவ்வதிகாரிகள் குறிப்பிட்ட சிறைக் கைதிகளைத் தெரிந்தெடுத்து, அவர்களுக்கு சாராயம், சசிப்பு போன்ற மதுவகைகளைக் கொடுத்து, உற்சாகப்படுத்தி கொலை வெறியைத் தூண்டினர். அந்த நேரத்தில் சிறைச்சாலை உயரதிகாரிகள் மதிய உணவுக்காக தத்தமது வீடுகளுக்குச் சென்றிருந்தனர்.

### வெறியாட்டம்

சரியான தருணத்தைப் பார்த்துக் கொண்டிருந்த கொலை வெறியர்கள் தங்கள் வெறியாட்டத்தை ஆரம்பித்தார்கள். ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டு சில நிமிடங்கள் சென்றன. மணி பிற்பகல் 2-30. பயங்கர வெறிக்கூச்சல் எழுப்பிக் கொண்டு கொலைஞர்கள் ஆயுதபாணிகளாக தமிழ் அரசியல் கைதிகள் வைக்கப்பட்டு இருந்த சப்பல் சட்டடத்தை நோக்கி ஓடிவந்தார்கள். தமிழ் அரசியல் கைதிகள் வைக்கப்பட்டிருந்த சிறைக்கூடங்களின் கதவுகள் ஏற்கனவே இனவெறியர்களின் வரவுக்காகத் திறந்துவைக்கப்பட்டிருந்தன. கத்திகள், பொல்லுகள், வாள்கள், கோடரிகள், இரும்புக் கம்பிகள், குத்தூசிகள் விறகுக் கட்டைகள் தமிழ் இளைஞர்களின் உடல்களில் பதம்பார்க்கத்தொடங்கின. வீரத் தமிழ் இளைஞர்களின் செங்குருதி சிலுவைக் கட்டிடத்திற்குள் ஆறாக ஓடத் தொடங்கியது. தலைகள் பிளக்கப்பட்டன. கண்கள் தோண்டப்பட்டன. இதயங்கள் கிழிக்கப்பட்டன. குடல்கள் உருவப்பட்டன. குரல்வளைகள் அறுக்கப்பட்டன. கை, கால்கள் துண்டிக்கப்பட்டன. இவ்வளவு கொடூரச் சித்திரவதைகளும் சிறைக்காவலர் முன்னிலையிலேயே நடைபெற்றன. சிங்களச் சிறைக் கைதிகள், தமிழ் அரசியல் கைதிகளைக் கொல்வதை இனவெறி பிடித்த சிங்களச் சிறைக் காவலர்கள் பார்த்து ரசித்தார்கள். கொலைகள் முடிந்தவுடன் கண்துடைப்பு நடவடிக்கையாக வெளியே காவலுக்கு நின்ற இராணுவ வீரர்கள் (தமிழ் அரசியல் கைதிகள் தப்பியோடாது இராணுவ வீரர்கள் வெலிக்கடையில் தொடர்ந்து காவலுக்கு நின்றார்கள்) உள்ளே அழைக்கப்பட்டார்கள். உள்ளே வந்த இராணுவ வீரர்கள் கொலைவெறிக்கு உரமூட்டினார்கள். ஆகாயத்தை நோக்கி வேட்டுகளைத் தீர்த்தும், சிறைக் கைதிகளை நோக்கித் தமது கைகளை அசைத்தும் இப்படுகொலைக்குத் தமது தார்மீக ஆதரவையும், மகிழ்ச்சியையும் தெரிவித்தார்கள். வெலிக்கடையில் இப்படுகொலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை ஹெலிக்கொப்டர் ஒன்று வெலிக்கடைச் சிறையின்மேல் தாழப் பறந்துகொண்டு இருந்தது. இது வெலிக்கடைக் கொலைக்கும் அரசாங்க உயர்மட்டத்திற்கும் இருந்த தொடர்பை உறுதிப்படுத்துகிறது.

### கண்களைத் தோண்டினர்

குட்டிமணி, ஜெகன் ஆகியோருக்கு மரண தண்டனை கிடைத்த வேளையில் அவர்கள் இருவரும் தங்களது கண்களைத் தன்பார்வையற்ற [illegible] அதன் மூலம் மலரவிருக்கும் ஈழத்தைப் பார்க்க வேண்டும் என்றும் உருக்கமான பொருள் நிறைந்த வேண்டுகோளை நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர். இதே காரணத்திற்காகக் குட்டிமணி குற்றுயிருடன் வெளியே இழுத்து வரப்பட்டு, சிறைச்சாலையின் மத்தியில் போடப்பட்டார். சிங்களவெறியர் விசிலடித்து ஆர்ப்பரித்து 'ஜெயவேவா' (மகிழ்ச்சி ஆரவாரம்) கோஷம் எழுப்பி குட்டிமணியின் கண்கள் இரண்டையும் கூரிய ஆயுதம் ஒன்றினால் தோண்டியெடுத்தனர். குட்டிமணியின் கண்கள் தோண்டியெடுக்கப்பட்டதும் சிங்களக் கைதிகள் கைதட்டி விசிலடித்து வெறியுணர்ச்சி பொங்க ஆர்ப்பரித்தனர். அதே வேளை குட்டிமணியின் கண்களைத் தோண்டிய இனவெறியன் ஏனைய சிங்களக் கைதிகளினால் தோளில் தூக்கப்பட்டு சிங்கள வீரனாகக் கொண்டாடப்பட்டான். ஏனைய கைதிகள் குட்டிமணியின் உடலை மேலும் குத்திக் கிழித்து அவரின் ஆணுறுப்பையும் வெட்டினார்கள். இறுதியாக 15 வெறியர்கள் குட்டிமணியின் குருதியைக் குடித்தனர்.

பின்னர் சிங்கள வெறியர் அங்கு அமைக்கப்பட்டிருந்த புத்த விகாரையின் புத்தர் சிலையின் முன் குட்டிமணியின் உடலை நிர்வாணமாக்கிப் போட்டார்கள். இவ்வாறாக ஜெகனின் கண்களும் தோண்டப்பட்டு, ஆண்குறி வெட்டப்பட்டு அவரின் உடலும் நிர்வாணமாகப் புத்தர் சிலையின் முன்னால் வீசப்பட்டது. காட்டுமிராண்டித்தனமான கூச்சல்களுக்கு மத்தியில் ஏனைய தமிழ் இளைஞர்களும் சித்திரவதை செய்யப்பட்டு, கொல்லப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு புத்தரின் காலடியில் எறியப்பட்டனர். சிங்கள பௌத்த வெறியர்கள், தமிழிளைஞர்களின் தலைகள், கண்கள், கால்கள், கைகள், உடல்கள், செங்குருதி யாவற்றையும் புத்தருக்கு காணிக்கையாக அளித்தனர்.

### நிர்வாணமாக

சிறைச்சாலை வாகனத்தில் தமிழ் இளைஞர்களின் உடல்கள் முழு நிர்வாணமாகப் போடப்பட்டன. அந்த உடல்களின் மத்தியில் உயிர்ப் பிரிவின் முனகல் கேட்டபோது கொலைவெறியர் பொல்லால் அடித்துக் கம்பியால் குத்தி அவ்வொலிகளை நிரந்தரமாக நிறுத்தினார்கள். அதேவேளை சி-3 பிரிவில் இருந்த தமிழ் இளைஞர்களையும் அன்றே கொல்வதற்கு இனவெறிக் கூட்டம் ஓடிவந்து இரும்புக்கதவுகளை உடைத்த போது அங்குவந்த சில சிறை உயர் அதிகாரிகள், ''இன்று இவ்வளவு போதும்; சென்று ஓய்வெடுங்கள் வீரர்களே! உங்களுக்கு ஒன்றும் நடக்காது'' என்று கூறிய போது கும்பலின் வெறி தற்காலிகமாகத் தணிந்தது. 25-7-1983 வெலிக்கடைச் சிறைச்சாலையின் பி-3 பிரிவில் இருந்த 6 பேரும் டி-3 பிரிவில் இருந்த 29 பேரும் பலியெடுக்கப்பட்டனர். அதாவது அன்று இரண்டு பிரிவுகளிலும் இருந்த ஒருவரும் தப்பாது மொத்தம் 35பேர் கொல்லப்பட்டனர்.

### மீண்டும் தாக்குதல்

27-7-1983 அன்று பிற்பகல் 4 மணிக்கு ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஊரடங்கு நேரத்தையே சிறை அதிகாரிகள் இரண்டாவது கொலைத் தாக்குதலுக்கும் தெரிந்தெடுத்தனர்.

வெலிக்கடையிலிருந்து தம்மை வேறு பாதுகாப்பான இடத்துக்கு மாற்றும்படி தமிழ் அரசியல் கைதிகள் விடுத்த கோரிக்கையை நிறைவேற்றாத அதிகாரிகள் ஒரு கண் துடைப்பு நடவடிக்கையை எடுத்தனர். 26 ஆம் திகதி நள்ளிரவு 2மணிக்குச் சப்பல் கட்டிடத்தின் சி-3 பிரிவில் இருந்த எஞ்சிய தமிழ்க் கைதிகள் 28 பேரையும் ஒய். ஓ. (Youthful Offenders) கட்டிடத்திற்கு மாற்றினார்கள்.

### இரண்டாவது தாக்குதல்

27-7-1983 அன்று மாலை 4-00 மணிக்கும் 4-30 மணிக்கும் இடைப்பட்ட நேரம் சப்பல் பகுதியில் ஏ 3 விசேஷ பிரிவில் இருந்த விளக்க மறியல் கைதிகளும் (சிங்களவர்) தண்டிக்கப்பட்ட கைதிகளும் (இத்தாலிய விமானமொன்றைக் கடத்தியதற்காகத் தண்டிக்கப்பட்ட சேபாலா ஏக்நாயக்கா உட்பட) கத்தி, கோடாரி, பொல்லு, விறகு கட்டை, கம்பி, குத்தூசி போன்ற ஆயுதங்களுடன் பெரும் கூச்சல் போட்டுக்கொண்டு கொலை வெறியுடன் ஒய். ஓ. கட்டிடத்தை நோக்கி ஓடி வந்தார்கள். ஏ-3 பிரிவில் இருந்த இக் கைதிகள் ஒய் ஓ கட்டிடத்திற்கு வரவேண்டுமானால் பூட்டிய பெரும் இரும்புக் கதவுகள் மூன்றையும் பூட்டிய சிறிய இரும்புக் கதவொன்றையும் உடைத்தும் சுவரொன்றை ஏறியுமே உள்வர முடியும். ஆனால் கைதிகள் இக்கதவுகளை உடைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அக்கதவுகள் யாவும் அவர்களுக்காகத் திறந்து விடப்பட்டிருந்தன.

### கைகளில் சாவிக்கொத்து

சுதந்திரமாக விடப்பட்ட முதல் நாள் கொலைஞர்களும் இவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். தாக்க வந்தவர்கள் தமது கைகளில் சாவிக் கொத்தை வைத்திருந்தார்கள். சில கதவுகள் உடைக்கப்பட்டன. சிலகதவுகள் சாவிகளினால் திறக்கப்பட்டன. மீண்டும் தமிழ் இளைஞர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டு இரத்த ஆறு ஓடியது.

முதல்நாள் படுகொலையின் பின்னர் எஞ்சிய தமிழ் இளைஞர்கள் எச்சரிக்கையுடன் இருந்தனர். சாவதற்கு முன் எதிர்த்துப் போராடுவதற்குத் தீர்மானித்துவிட்டனர். ஆயுதந்தாங்கிய கும்பலை எதிர்ப்பதற்கு அவர்கள் கையில் எதுவித கருவிகளும் இல்லை. போர்வையைக் கதவுக் கம்பிகளுக்குள் விட்டு, கதவைத் திறக்காதபடி போர்வையை உள்ளுக்குள் இருந்து இழுத்துப் பிடித்தனர். சிறையறையில் பாத்திரங்களுக்குள் இருந்த சிறுநீரையும் சாப்பிடக் கொடுக்கப்பட்ட காரமான குழம்பையும் இடையிடையே கொலைஞர்கள் மீது ஊற்றினார்கள். கொலைவெறியர்கள் கதவுக்கு அருகில் நெருங்கும் போது சாப்பாட்டுக் கோப்பைகளினால் குத்தப்பட்டார்கள். சிங்களக் கைதிகள் வெளியிலிருந்து நீண்ட தடிகளினாலும் கம்பிகளினாலும் குத்தி

(7 ஆம் பக்கம் பார்க்க)




## தியாகத் திருநாள்

இறையோனை நினைந்துருகி
இணையற்ற தியாகமதை
மறை கூறும் வழியினிலே
நிறைவேற்ற வரும் திருநாள்.

இப்ராஹிம் நபியவரின்
ஈடில்லா தியாகமதை
இகத்தோர்கள் நினைந்து மனம்
உருகிடவே வரும் திருநாள்.

இனமென்றும் மொழியென்றும்
பேதங்கள் புறக்கணித்து
இணையற்ற சமத்துவத்தை
விளக்கிடவே வரும் திருநாள்.

தியாகத்தின் பின்னணியில்
ஓங்கிவளர் இஸ்லாத்தின்
தக்பீரின் முழக்கமதை
ஒலித்திடவே வரும் திருநாள்.

தியாகத்தின் பட்டறையில்
புடம் போட்ட தங்கமதாய்
திரும்பி வரும் ஹாஜிகளை
வரவேற்க வரும் திருநாள்.

மண்ணகத்தே மலர்கின்ற
மகத்தான தியாகிகள்
விண்ணகத்தே மணம் வீச
வாழ்த்துரைக்க வரும் திருநாள்.

— ★ —

**யாழ்- அஸீம்**

[இன்று ஹஜ்ஜுப்பெருநாள். அதனையொட்டி இக்கவிதை பிரசுரமாகிறது]

## வாசகர் திருமுகம்

### இறுப்பிட்டி வீதி

பல வருடங்களாக பெருந் தெருக்கள் திணைக்களத்தினால் திருத்தப்படாததால் புங்குடுதீவு [illegible] இறுப்பிட்டி துறை பிரதான வீதி மிக மோசமான நிலையில் காணப்படுகின்றது.

சுமார் இரண்டரை மைல் நீளமான இந்த வீதி வாகனங்கள் எதுவும் செல்ல முடியாமல் பள்ளங்கள் நிறைந்து காணப்படுகின்றது.

இதனால் இப்பாதையில் சேவையில் ஈடுபட்டு வந்த வ. பி. போ. சபை பஸ் சேவையும் (இல 776) பலவருடகாலங்களாக நடைபெறவில்லை.

இதனால் மக்கள் இரண்டரைமைல் தூரம் நடந்து வந்தே குறிகாட்டுவான் பஸ்ஸில் தமது பிரயாணத்தைத் தொடர வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாக்கப் பட்டிருக்கின்றார்கள். இதனால் நோயாளரும், வயோதிபரும், குழந்தைகளும் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டி உள்ளது.

எனவே இவற்றைக் கருத்தில்கொண்டு மழை காலம் தொடங்கும் முன்பு இவ்வீதியைச் செப்பனிட சம்மந்தப்பட்டவர்கள் உரிய கவனம் எடுக்க வேண்டும் என வேண்டுகின்றேன்.

**சா.கோகிலதாசன்**

பொருளாளர்
ஐங்கரன் சனசமூக நிலையம் புங்குடுதீவு 6

## பாடம் பயில்வோம்

### தமிழ்மொழி - விடைகள்

23-7-88 சஞ்சிவியில் பிரசுரமான ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் இல: 4 க்கான விடைகள் இங்கு பிரசுரமாகின்றன.

**தமிழ் விடைத்தாள் இல: 4**
**விடைகள்**

(1) i. முதிர்ச்சி iv. பிண்ணாக்கு
ii. வேளாளர் v. சொர்ப்பனம்
iii. பழக்கவழக்கம்
(2) i. முக்காரம் போடும் iv. மாலுமி
ii. ஓடினேம் v. பாலன்
iii. செழித்த புல்
(3) i. தரை iv. தமையன்
ii. வாசித்தல் v. விமானம்
iii. குழல்
(4) i. எனது தாய் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவள்.
ii. அரசன் பகைவனை வாளால் வெட்டினான்.
iii. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்.
iv. சிதையின் நடை அன்னத்தின் நடையை ஒத்திருந்தது.
v. சீரைத்தேடின் ஏரைத் தேடு.
(5) i. இணைமொழி vi. வெள்ளிவிழா
ii. பிறவினை vii. எதிர்மறை
iii. அவன் viii. நீ
iv. செம்மை + அடி ix. பெயரெச்சம்
v. நடுநிசி x. கண் வளர்ந்தது
(6) i. வாடிவதங்கி iv. ஆழம்
ii. கனம் v. கொடுமை
iii. திடுதிடு
(7) 1. இந்து சமுத்திரத்தில் இலங்கை இருக்கிறது.
2. இலங்கை ஒரு சிறிய தீவு.
3. இங்கே தமிழர்களும் சிங்களவர்களும் வாழ்கின்றார்கள்.
4. அவர்கள் மிகவும் ஒற்றுமையாக வாழுகின்றார்கள்.
(8) i. படர்க்கைப் பன்மை வினை
ii. பலர்பால் iv. பெயர்ப்பயனிலை
iii. உயர்திணை v. நிகழ்காலம்
(9) முற்காலத்தில் தமிழ் நாட்டை சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் நீதி தவறாது ஆட்சி புரிந்தனர்.
(10) ——

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்த உற்சவ சிறப்பிதழ் ★


கடவுள் மகன் கிறீஸ்து கண்ட அன்புச்
சீடர் யாகப்பரே! இடமெங்கும்
தேரோடி வந்து இடர் தீருமையா!

★

**வைற் ஹவுஸ்**
191, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

★ பலசரக்குப் பொருட்கள்
★ பால்மா, சோப் வகைகள்
★ சைக்கிள் ரயர், ரியூப் உதிரிப்பாகங்கள்
முதலியவற்றை
நிதான விலையில் வாங்க நாடி வாருங்கள்!

**சிவசக்தி ஸ்ரோர்ஸ்**
47, 4ஆம், குறுக்கு வீதி.
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

மளிகைப் பொருட்களுக்கு
சிறந்த இடம்

**பகீரதன் ஸ்ரோர்ஸ்**
22, புதிய சந்தை உட்புறம்,
குருநகர்.

யாகப்பரின் அருளை யாசிக்கும்

**கமலா ஸ்ரோர்ஸ்**
123, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.

குருநகர் காவலரே!
புரவியேறி வாரும்!!

**பூண்டிமாதா ஸ்ரோர்ஸ்**
21, நவீன சந்தை உட்புறம்,
குருநகர்.

மில்றி சாப்பாட்டு வகைகளை
மினக்கேடு இல்லாமல்
புசித்து ருசித்து மகிழ

●

**லங்கா மில்றி கிளப்**
234/1, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

ஆங்கில மருந்து வகைகளை
✶ நிதான விலையில்
✶ மொத்தமாகவும்
✶ சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
✶ சிறந்த இடம் ✶

**றெஜின் குளோப் அன் பார்மசி**
12, சின்னக்கடை வீதி,
குருநகர்.

கடல் அலைகள் கொஞ்சும்
குருநகர் காவலனே வாழ்க!

சகல விதமான இரும்புப் பொருட்கள்
பெயின்ற் வகைகள், ஸ்லோன் பைப்
முதலான கட்டடப் பொருட்களை
பெற்றுக் கொள்வதற்கு

★

**செல்வா ஹாட்வெயர்**
192, பாங்ஷால் வீதி, சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

● ஆங்கில மருந்து வகைகளை
● மொத்தமாகவும், சில்லறையாகவும்
● பெற்றுக்கொள்ள
● சிறந்த ஸ்தாபனம்

**வைஜி மெடிக்கல்ஸ்**
✶✶✶✶✶✶✶✶
520, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சகலவிதமான
மளிகைப்பொருட்களையும்
நிதான விலையில்
பெறுவதற்கு நாடுங்கள்!

**நாதன் ஸ்ரோர்ஸ்**
213C, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


## அற்புதர் சந்தியோகுமையோரின் சரித்திரம்

அனைத்துலக கிறிஸ்தவர்களால் சந்தியோகுமையோர் என்றும், படையாளி, யக்கோ (யாக்கோப்பு), பெரிய யாகப்பர், (St. James the Great) படைமிரட்டிச் சந்தியாகப்பர் என்றும் அழைக்கப்படும் புனித யாகப்பர் எம்பிரான் யேசுக்கிறிஸ்து நாதரினால் அவரது சகோதரன் புனித அருளப்பருடன் ''இடியின் மக்கள்'' என அழைக்கும் பேறு பெற்றவர்.

### பெற்றோர்

யூத குலத்தில் நீதி நெறியிற் பெயர் பெற்ற குடும்பத்தில் செபதேயு என்பவருக்கும் யூத குரு ஒருவரின் மகளான சலோமை என்னும் நங்கை நல்லாளுக்கும் புத்திரனாக புனித யாகப்பர் பிறந்தார். புனித அருளப்பர் இவரது தம்பியாவார். செபதேயு கலிலேயாக் கடலில் தனது மைந்தருடனும் தொழிலாளருடனும் மீன்பிடித்து அதன்மூலம் பெறும் வருமானத்தைக் கொண்டு வாழ்க்கைப்படகையோட்டியவர்.

### அழைக்கப் பெற்றோர்

ஒரு நாள் யூதேயாக் கடலில் தன் தந்தையுடனும் தன்தந்தையின் தொழிலாளருடனும் புனித யாகப்பரும் புனித அருளப்பரும் மீன் பிடித்துக் கொண்டிருக்கையில் யேசு இவர்களை ''என் பின்னே வாருங்கள். உங்களை மீன் பிடிப்பவர்களாகவல்ல மனிதர்களைப் பிடிப்பவர்களாக்குவேன்'' என அழைத்தார். ஒரு அற்புதமும் காணுமலேயே வலைகளையும் தாய்தந்தையரையும் விட்டு தமது தம்பி அருளப்பருடன் சந்தியோகுமையோர் யேசுவைப் பின்தொடர்ந்தார்.

### முக்கிய நிகழ்ச்சிகளில் யேசுவுடன்

தபோர்மலையில் யேசு மறுரூபமானபோது யேசுவுடன் இருந்தவர்களில் இவரும் ஒருவர் (மூவர் இருந்தனர்) மாற்கு 9:1 பிரதான செபக்கூட்டத் தலைவன் யேரியஸ்சின் மகளை உயிர்ப்பிக்கும் போது சாட்சியாகவிளங்கிய மூன்று அப்போஸ்தலர்களுள் இவரும் ஒருவர். [மாற்கு 5:37]

யேசு பாடுபடுவதற்கு முன் ஜெஸ்தமனி தோட்டத்தில் தமது பூங்காவனப்பாடுகளுக்கு சாட்சியாகத் தெரிந்து கொண்ட மூன்று அப்போஸ்தலர்களுள் இவரும் ஒருவர்.

### யேசு மரித்தபின்

தூய ஆவியின் வரத்தினல் அப்போஸ்தலர்கள் வேத போதனையை உலகத்தின் பல திக்கும் சென்று போதிக்கத் தீர்மானித்தனர். அதன் அடிப்படையில் அவர்கள் உலகத்தின் நாலா திக்கிலும் யேசுவின் அரசைப் பரப்பத்தொடங்கினர்.

தூய ஆவியின் வரத்தினல் அப்போஸ்தலர்கள் பேசியவற்றைக் கேட்ட சகல இன மக்களும் இவர்கள் பேசியவற்றை அவரவர் மொழிகளில் கேட்கும் அற்புதம் ஏற்படலாயிற்று.

எனவே எமது புனிதர் சந்தியோகுமையோர் இஸ்பானியா (Spain) தேசம் சென்று யேசுவின் போதனைகளைப் போதித்து தமக்கு ஒன்பது சீடர்களையும் தெரிந்து கொண்டார்.

யூதேயாவிலும், சமாரியாவிலும் யேசுவை விட இரட்சகரில்லையென அவரது போதனைகளைப் போதித்து கணக்கற்றவர்களை யேசுவின் திருமறையில் சேர்த்துக் கொண்டார்.

யூத வேதபாகரான பரிசேயரோடு தர்க்கித்து அவர்களை நாணச் செய்து மறைப்புரட்சி

**இ. ஞோறஸ்**

செய்தார். இதனல் யூதர் கோபம் கொண்டு அவரைக் கொல்லச் சதித்திட்டம் தீட்டினர்.

இஸ்பானியா போன்ற பல இடங்களுக்கும் சென்ற புனிதர் இறைமகன் யேசுவின் அருளைக் கொண்டு அற்புதம் பல செய்தார். நோயாளரைக் குணப்படுத்தினர் கஷ்டப்பட்டவர்களைத் தேற்றினர்.

### அப்போஸ்தலர்களுள் முதல் வேதசாட்சி

யூதர்களின் சதித்திட்டத்தின் மூலம் மரணத்தைத் தழுவிக்கொண்ட புனிதர் அப்போஸ்தலர்களுள் முதல் வேதசாட்சியானர். அவர் மரணிக்கும்போது எபேஸ் பட்டணத்தில் தேவதாய் காட்சியளித்த போது கூறிய ''ஜெருசலேமில் மரிப்பார்'' என்ற கூற்று நிறைவேறிற்று. அவரின் மரணவேளை தேவதாய் அவருக்கு வாக்குப்பண்ணியவாறு அவரருகே அவருக்கு ஆறுதலாகக் காட்சி கொடுத்தார்.

### ஸ்பானியா தேசம் சத்துருக்களால் சூழப்பட்ட போது

இத்தேசத்தை நம்மில்

(6–ஆம் பக்கம் பார்க்க)



### நன்றி

இதழுக்கு விளம்பரம் தந்து உதவியவர்களுக்கும்!

இதயசுத்தியுடன் விளம்பரம் தந்தும் இடமின்மையால் தவிர்க்கப் பட்டவர்களுக்கும்!

**தயாரிப்பாளர்கள்**

## பங்குத்தந்தையின் ஆசியுரை



புனித யாகப்பர் திருவிழாவைக் கொண்டாடும் பங்குமக்களின் மகிழ்ச்சியோடு எனது மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். வருடம் தோறும் இவ்விழாவைப் பங்கு மக்கள் பெருவிழாவாகக் கொண்டாடுவார்கள். இத்துன்பமான காலகட்டத்திலும் தங்கள் விசுவாசத்தாலும் [illegible]ராமுயற்சியாலும் [illegible]ர்கள் பாதுகாவலராம் புனிதயாகப்பரின் திருவிழாவைக் கொண்டாடி மகிழ்வதையொட்டி அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

குருநகர் மக்கள் இறை அன்பைப் பெற்று, தங்கள் பாதுகாவலின் வழியாக தங்கள் வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணித்து கிறிஸ்துவுக்கு உண்மைச் சாட்சிகளாக வாழவேண்டுமென ஆசி கூறுகிறேன்.

**பி.எம்.இம்மானுவேல்**
பங்குத் தந்தை
புனிதயாகப்பர் ஆலயம்,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

சிறப்பிதழ் தயாரிப்பு:
குருநகர் செய்தியாளர்:
**ரி. பி. லிங்கம்.**
குருநகர் புதிய சந்தை வர்த்தகர் சங்கச் செயலர்:
**யோ. கிறிஸ்துராஜா.**

## அன்னை மண் மீண்டிட அருளுக!

கடலோடும் குருநகர்
கரையோரம் அமர்ந்தெழில்
இடமெங்கள் நெஞ்சத்தில்
தந்து வினை அளிப்பீரே!

படகோடும் [illegible]ம் தொழி[illegible]
பாரிதில் மேம்பட்டு
கடனேதும் வந்திடாக்
காத்திடும் யாகப்பரே!

வடநாடு வாழ்பவர்
வந்தவர் மட்டில்லை!
இடமிதும் வடபகுதி
அவர்களுக்கு இசைவதோ?

குடமுலை நந்தூட்டி
குவலயம் காத்திடற்கு
இடந்தந்த அன்னைமண்
திரும்பிட அருள்செய்யும்!

'கவிகரன்'


புனித யாகப்பர் புரவியேறி
புவியதனில் பவனி வந்து
இனியிந்த மண் ஓங்க
இடர் களையும்!

**முரளி ஸ்ரோர்ஸ்**
19, புதிய சந்தை உட்புறம்,
குருநகர்.

யாகப்பரின் தேர்ப்பவனி சிறப்புற
**நல்லாசிகள்!**
★
**ரவீந்திராஸ்**
46, 4ஆம் குறுக்கு வீதி,
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

மதிய, மாலை உணவுகளை
மகிழ்ச்சியாக அருந்துவதற்கு
வாருங்கள்!

**சுதாஸ் போசனசாலை**
ஜும்மா மஜ்ஜித் லேன்,
யாழ்ப்பாணம்.

✶ உங்கள் முன்நிலையில்
✶ உடன் அரைத்துத் தரப்படும்
**பேமிலி கோப்பித்தூளைப்**
பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

**பெமிலி காடின்ஸ்**
13A, குருநகர் நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சந்தியோமையோரே! யாகப்பரே!
சந்தோஷம் இனியிந்த மக்களுக்கு
எந்நாளும் தோன்றுவதாக!

**அருமை போசனசாலை**
8, ஜும்மா மஜ்ஜித் லேன்,
யாழ்ப்பாணம்.

புத்தகங்கள், பலசரக்குப் பொருட்களை
எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும்,
பெற்றுக்கொள்ள விஜயம் செய்யுங்கள்!

**லோகராஜா ஸ்ரோர்ஸ் &
காயத்திரி புக் சென்ரர்**
11, 12, 4-ம் குறுக்கு வீதி,
குருநகர் புதிய சந்தை,
யாழ்ப்பாணம்.

★ கடந்த காலங்களில் அகதிகளுக்கு
இடந்தந்தவரே!
★ உடன் பிறப்புக்களை உணவழித்துக்
காத்த மண்ணின் காவலரே!
★ படகோட்டிப் பயனடைந்திட பாரிதனில் பவனி வாரும்!

✶ **ஜெயபாரத கபே** ✶
52, சின்னக்கடை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

யாழ்நகரில் சிறந்த மில்றி
உணவு வகைகளை உண்டு மகிழ்ந்திட
விஜயம் செய்யுங்கள்!

**சிங்கப்பூர் போசனசாலை**
42, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

✶ பலசரக்குப் பொருட்கள்,
✶ வாசனைத் திரவியங்கள்
✶ குளிர் பானங்களைப் பெற்றிட

**தர்ஷினி ஸ்ரோர்ஸ்**
49, 4-ம் குறுக்கு வீதி,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

அண்டியவரை காக்க எண்ணும்
ஆணவத்தைக் கொன்றருளும்
யாகப்பரே!
★
**சத்தியா
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**
86, பாங்ஷால் வீதி, சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

சொரூபங்கள், செபமாலைகள்,
மறை நூல்கள், குமைஞ்சான் மெழுகுதிரி
வகைகளுக்கு நாடவேண்டிய இடம்
★
**புனித யாகப்பர்
ஆலய விற்பனை நிலையம்**
ஆலய வளவு, குருநகர்.

கடல் அலைகள் பொங்கும்
குருநகர் காவலரே! யாகப்பரே!
அலை அலையாய் துயர் தொடர
அல்லலுறும் தமிழ் மக்கள்
துயர்களையத் தேரோடி வாரும்!
★
**ஹாசன் பலரக சேவை**
6ஆம் குறுக்கு வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்த உற்சவ சிறப்பிதழ் ★

## 127 ஆண்டுகள் நிறைவு கண்ட யாழ்ப்பாணம் புனித சந்தியோகுமையோர் ஆலயம்

1961-ம் ஆண்டில் தமது 100 வது ஆண்டின் நிறைவினைக் கொண்டாடி மகிழ்ந்த யாழ்ப்பாணம் குருநகர் புனித யாகப்பர் பங்கினைச் சேர்ந்த மக்கள் இன்று தமது ஆலயத்தின் 127 வது ஆண்டினை பூர்த்தி செய்யும் விழாவினை மிக அமைதியாக பக்தி விமரிசையுடன் கொண்டாடும் இக்காலத்தில் ஆலயத்தின் வரலாற்றை ஈண்டு நினைவு கூருதல் பொருத்தமானதே.

"யாழ்ப்பாணத்திலே சித்திரங்கள் வரைவதில் திறமை வாய்ந்து ஐரோப்பியர்களாலும் பாராட்டப்பட்டவருள் மேஸ்திரி சந்தியோகு ஒருவராவர். இவர் குருநகர் வாசியும் சந்தியோகு அப்போஸ்தலர் பங்கைச் சேர்ந்தவருமாவர். இவரால் இயற்றப்பட்ட சந்தியோகுமையோர் ஆலயத்தின் தூபி வியற்புக்குரியது."

(யோண் H. மாட்டீன் —யாழ்ப்பாணத்தைப் பற்றிய குறிப்புகள்.)

### பங்குமக்கள்

இவ்வாலயத்தைச் சேர்ந்த பங்குமக்கள் குருகுல மக்கள் என அழைக்கப்படுவர். யாழ்ப்பாண இராட்சியத்தின் பாதுகாப்பைக் கருதி சிங்க ஆரியன் எனப்பட்ட அரசரின் ஆட்சியின்போதுஅவரது அழைப்பின் பேரில் சோழ நாட்டிலிருந்து யாழ் நகரக் குருகுல மக்கள் தமது தலைவரும் இராசகுமாரருமான "வீரசிங்கன் குருகுல நாட்டுத்தேவன்" என்பவரின் தலைமையின் கீழ் போர்வீரர்களாய் இங்கு வந்து குடியேறியவராவர்.

யாழ்ப்பாணப் பட்டினத்தின் மேற்குப் பகுதியிலே குடியேற்றப்பட்ட இவர்கள் தமது பூர்வீக பெயரான "குருநாடு" என்பதை நினைவுகூர தாம் குடியேறிய ஊருக்கு குருவூர் எனச் சூட்டினர். அது பின்னர் கரையூராகி தற்பொழுது குருநகர் என விளங்குகின்றது

'கரையூரைக் குருநகராய்க் காண்கின்றோம் நாம். குருநகரைக் கலைநகராய் உயர்த்துதற்கு'

(பண்டிதர் க. யோ. ஆசிநாதன், புத்தொளி கலைவிழா மலர்)

குருகுல மக்களான இவர்கள் தொடர்ந்து ஆரிய அரசர்களான யாழ்ப்பாணச் சக்கரவர்த்திகளின் தரைப்படையிலும், கடற்படையிலும் பொறுப்புள்ள பதவிகளில் இருந்து சேவை செய்து வந்திருக்கின்றனர்.

போர்த்துக்கீசரின் படையெடுப்பின்போது அவர்களை வன்மையாக எதிர்த்தவர்கள் இவர்களே. அக்காலத்தில் போர்த்துக்கேசரால் பாவிக்கப்பட்ட நவீன ஆயுதங்களுக்கு எதிரே இவர்களால் பாவிக்கப்பட்ட பண்டைக்கால ஆயுதங்கள் எம்மாத்திரம்.

குஎரோஸ் என்ற போர்த்துக்கீச சரித்திர ஆசிரியர் இவர்களைக் குறிப்பிடுகையில் "இவ்விராச்சியத்தில் மிகவும் "யுத்த ஓர்மம் படைத்தவர்கள்" என வர்ணிக்கிறார்.

ஆதியிலே சைவசமயத்தவர்களாய் இருந்த இம் மக்கள் யாழ்ப்பாணத்திலே 1617-ம் ஆண்டில் போர்த்துக்கீசரின்கொடி நாட்டப்பட்டு 1619-ம் ஆண்டில் பிலிப் டி. ஒலிவேரு தேசாதிபதியாக வந்த பின்னர் 1624-ம் ஆண்டிலே கத்தோலிக்கராயினர். 1624-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7-ந் திகதி கோட்டையிலுள்ள புதுமைமாதாகோவிலில் அரச பரம்பரையைச் சேர்ந்த பலருடன் ஞான தீட்சை பெற்றனர்.

### பங்கின் ஆரம்ப காலம்

இப்பங்கு தனித்து இயங்குவதற்கு முன்னர் ஆசனக் கோவில், புனித யாகப்பர் ஆலயம், அடைக்கலமாதா கோவில், புதுமைமாதா கோவில் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. இவை ஒன்றாக இயங்கிய காலத்தில் இவ்வாலயங்களின் திருநாட்கள் நடைபெறும் நாட்களில் இவ்வாலயங்களைச் சேர்ந்த மக்கள் எந்த வேலைக்கும்போவதில்லை. இத்தினங்கள் இம்மக்களால் ஓய்வு தினங்களாக ஏற்கப்பட்டு வந்திருப்பதை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. 1892-ம் ஆண்டு தொடக்கமே இப்பங்கு தனிப்பங்காக இயங்கத் தொடங்கிற்று அக்காலத்தில் குருக்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தமையே காரணம்.

### ஆரம்பத்தில் இருந்த ஆலயம்

1624-ம் ஆண்டில் சத்தோலிக்கரான இப்பங்கு மக்கள் போர்த்துக்கீசர் காலத்தில் பகிரங்கமாக சிற்றாலயங்களை அமைத்து வழிபட்டனர்.

இதேபோன்று தற்போது இருக்கும் ஆலயம் இருந்த அதே இடத்தில் ஒரு சிறு ஆலயம் இருந்ததும், அது அகற்றப்பட்டு தற்போதைய ஆலயம் அமைக்கப்படலாயிற்று. சிற்றாலயம் இருந்தமையை ஆலயத்தின் உள்ளே நடுவிலே இருக்கும் கல்வெட்டு சான்று பகருகின்றது. இக்கல்வெட்டில் வண. பிதா யோசவ் றெபெய்றோ அவர்களின் பூதவுடல் 1-11-1783-ல் அடக்கம் செய்யப்பட்டதற்கு சான்றாக விளங்குவதுடன் இவ்வடிகளாருக்கு 1894-ம் ஆண்டு வரை அவரின் ஆன்ம இளைப்பாற்றுக்கான துக்கப்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டதற்கான ஆதாரமும் உள்ளது.



ஆலயத்தின் முகப்புத்தோற்றம்

### தற்போதைய ஆலயம்

பல கலையம்சங்களை உள்ளடக்கிய தற்போதைய சந்தியோகுமையோர் ஆலயத்துக்கான வரைபடத்தைத் தாமே வரைந்து அதற்கான அத்திவாரக் கல்லை 1861ஆம் ஆண்டு ஆடி மாதம் இருபத்தைந்தாம் திகதி (புனிதரின் திருநாளன்று) நாட்டியவர் பிரான்ஸ் தேசத்தைக் சேர்ந்தவரும் அக்காலத்தில் இவ்வாலயத்தில் கட்டளைக் குரவராய் திகழ்ந்த அதி. வண. பிதா எல். சி. எச். மொறூஆ ஒ.எம்.ஐ. ஆவார்.

இவரின் நேரடி கண்காணிப்பில் இப்பங்கினைச் சேர்ந்தவரும் தமது சொந்த முயற்சியால் அனுபவத்தின் மூலம் கற்றுத் தேர்ந்தவருமான சிற்பாசிரியரும் மேஸ்திரியுமான சந்தியோ அவர்களின் மேற்பார்வையில் கட்ட ஆரம்பிக்கப்பட்டு சிறப்புறச் செய்து முடிக்கப்பட்டது, இவ்வாலயத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் தூபி (டோம்) மாடம் மேஸ்திரி சந்தியோ அவர்களின் கைத்திறனுக்குச் சான்றாக விளங்குகிறது.

### தனிச் சிறப்பு

இப்பங்கு ஆரம்பத்தில் 39 குடும்பங்களையே கொண்டிருந்தது. ஆலயத்தை அமைக்கத் தொடங்கியபோது வருங்காலத்தைக் கருத்தில் கொண்டே செய்தமையினால் ஆயிரக்கணக்கான குடும்பங்களையும் உள்ளடக்கக்கூடிய விதமாக இது அமைக்கப்பட்டுள்ளது.

இப்பங்கு மக்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### குருநகர் பதியில் வந்த திருவே

விண்டு தலை குரலெடுத்து
விரைந்து வரும் புணரி
வீதி யெங்கும் நீர் தெளித்து
தூது செல்லும் தென்றல்
கொண்டலிடு வண்டலின் மேல்
குருகினங்கள் கூடி
குஞ்சுகட்கு இரைதேடி
கொண்டு செல்லும் பாடி
நண்டுவளை குண்டுகளை நாரையினம் தேடி
நாதமொடு தன்னினத்தை
சேதி சொல்லும் கூடி
பண்டு தமிழ் குருநகரை பதியெனவே காத்த
பரமனருள் யாகப்பர் திருநாமம் வாழி,
தேவரருள் யாகப்பர் திருநாமம் பாடி
தினந்தினம் வணங்கிடுவோம்
குருநகரில் கூடி
மூவருக்கும் இனியவராய்
மூத்த அப்போஸ்தலராய்
முது மறையின் காவலராய்
சிறையிலுயிர் நீர்த்த
பாவ வழி துலுக்கர்படை
படை வெருண்டு ஓட
பரமனருள் கிருபையினால் வெண்புரவி ஏறி
பாவிலுமைப் பாடி நிதம் பணிந்து
வணங்கிடுவோம்
பழைமை மிகு குருநகரின்
பதியில் வந்த திருவே

தூயமணி பி. மிக்கேல்பிள்ளை

யாகப்பரின் தேர்ப்பவனி
யாங்கணுமே அடைவதாக!
★
சத்தியா ஸ்ரோர்ஸ் அன் பேக்கரி
96, பாங்ஷால் வீதி,
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

குருநகர் சந்தியோகுமையோர்
ஆலய வருடாந்த உற்சவ சிறப்பிதழுக்கு
எமது ஆசிகள்!
★
றஞ்சனூஸ் ஸ்ரோர்ஸ்
84, பாங்ஷால் வீதி,
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

சீமாட்டி
கூறைச் சேலைகள், பட்டு வேட்டி,
சால்வை எம்மிடம் கிடைக்கும்.
ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை
122, மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.

கோழி றோஸ்ட், புரியாணி, ஆட்டு குறுமா,
கொத்து றொட்டி, நூடில்ஸ்
மேலும் சுவையான உணவு வகைகளுக்கு
★
ராஜ் மஹால்
வெள்ளிக்கிழமைகளில் ஸ்பெஷல்
சைவச் சாப்பாடு மட்டும்.
53, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குருநகரைக் காப்பவரே !
யாகப்பரே ! குவலயத்தில்
குதூகலம் வந்தடைவதாக !
★
மாணிக்கம் ஸ்ரோர்ஸ்
16, பாங்ஷால் வீதி,
குருநகர் புதிய சந்தை,
யாழ்ப்பாணம்.

பகல், இரவு உணவுகளை
அசைவ போசனத்தில்
ஆனந்தமாக உண்டு மகிழ்ந்திட
விஜயம் செய்யுங்கள்
★
ஆனந்த பவான்
ஸ்ரான்லி வீதி,
(முட்டாசுக் கடைச் சந்தி)
யாழ்ப்பாணம்.

தியாகத்தின் திருவிளக்கே!
திமை கொல் புனித
யாகப்பரே! குருவே !
மாயப்போர் மாய்த்து எமை
நேயத்துடன் வாழவைப்பாய்!
உங்கள் சகல மளிகைத்
தேவைகளுக்கும் நாடுங்கள்
★
மேரிமாதா ஸ்ரோர்ஸ்
12A, சின்னக்கடை வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

யாகப்பரின் தேர்ப்பவனி
யாங்கணுமே அடைவதாக!
விக்ரர் அன் சன்ஸ்
(விக்ரேஸ்)
100, [illegible]
யாழ்ப்பாணம்.

ஆங்கில மருந்து வகைகளின்
வடபகுதி மொத்த வியாபாரி
சிறில் பார்மஸி லிமிட்,
37, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.

குருநகரின் குல விளக்கே!
கருணை நிறை புனித யாகப்பரே
அன்புடன் உம்மருள் தந்து
ஆதரித்துக் காத்திடுவீர்!
யன்மார், லிஸ்ரர், யமகா, ஜோன்சன்
கடற்றொழில் இயந்திர உதிரிப்பாகங்
களுக்கும் நூல், வலை, கயிறு, போயா
போன்ற மற்றும் உபகரணங்களுக்கும்
நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்,
குருநகர் கடற்றொழில்
அபிவிருத்திச் சங்கம்
30, சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

குருநகர் யாகப்பர் ஆலய
வருடாந்த உற்சவம் சிறப்புற
வாழ்த்துக்கள்!
ஆங்கில மருந்து வகைகள், பால்மா
வகைகள் எம்மிடம் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
சிற்றி மெடிக்கல்ஸ்
487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

புனிதர் யாகப்பர் புவிமிது
புரவியில் விரைந்து வந்தே
இனிதிவர் வாழ்க்கை மேம்பட
இறைஞ்சி நிற்கும்!
முருகன் எலக்றிக்கல்ஸ்
ஸ்ரோர்ஸ்
6/8, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

அலைகடல் தவழும் குருநகர்
காவலனை இறைஞ்சி நிற்கிறோம்!
X. B. மொறுயஸ்
தராதரம் பெற்ற
பல் கட்டுபவரும், கண் பரிசோதகரும்.
50, மணிக்கூட்டு வீதி.
(வெலிங்டன் தியேட்டர் முன்பாக)
யாழ்ப்பாணம்.

★ பால்மா வகைகள்
★ பலசரக்குப் பொருட்கள்
★ சோப் வகைகள்
தரமாகவும், மலிவாகவும் பெற்றுக்கொள்ள
விஜயம் செய்யுங்கள்.
ஜனசக்தி ஸ்ரோர்ஸ்
15, சின்னக்கடை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



### ச, சிவனடியார்

அன்பின் தெய்வமே! இன்றுடன் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு மறைந்து விட்டாலும் உங்களின் நினைவு எங்களை விட்டு அகல வில்லை. உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரக்குழந்தைகள்,
உறவினர்கள்,

மயிலிட்டிக்கரை
மயிலிட்டி.

(5279)



## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

வெலிக்கடைத் தியாகி
### செல்வன் அ. சுதாகரன்

ஜெனனம்: 1962-10-21 — படுகொலை: 1983-07-25

திக்கெல்லாம் சோயில் திருவடிதொழுது பெற்ற எம் அருமைச் செல்வமே!
இறைவன் தம்முடன் விரைவாகச் சேர்ப்பதற்குத் தான் சகல கலைகளையும் இளமையில் தந்து காட்டி மறைத்தானே! நிலையில்லாத உலகவாழ்வு வேண்டாமென வீரசுவர்க்கத்திற்கு அனுப்பினானே!! நாளும் பொழுதும் உன் நினைவால் வாடுகின்றோம். நீயும் கடவுளும் ஈழமாதாவின் சோக நாடகங்களை விண்ணிலிருந்து காண்பீர்களே!!!

உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உன்நினைவால் வாடும்
ஆருயிர் அம்மா, அப்பா,
சகோதர சகோதரிகள்.

ஆத்திசூடி வீதி,
யாழ்ப்பாணம்.

(5274)


அரசாங்க
# வைத்திய சாலைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும்

பண்டத்தரிப்பு ஜூலை25
அரசினர் வைத்திய சாலைகள் மருந்தகங்கள் அனைத்திற்கும் மின் இணைப்பு கிடைக்கவுள்ளது.

கிராமிய மின்இணைப்பு திட்டத்தின் மூலம் அனைத்து சுகாதார சேவை நிறுவனங்களுக்கும், மின் இணைப்புச் செய்வதற்கான விவரங்களைச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பிராந்தியப் பணிப்பாளர்களிடம் கோரியுள்ளார்.

பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் தமது பகுதியில் இதுவரை மின்சார வசதி அற்றதாகவுள்ள நிறுவனங்களின் விவரங்களைச் சேகரிக்கின்றனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள 66 வைத்திய நிறுவனங்களும் 1989 ஆம் ஆண்டு முடிவதற்கு முன் மின் இணைப்பு பெற்றுவிடும். (ஒ-120

மக்கள் முகம்

### கண்ணகி சன சமூக நிலையம்

கொடிகாமம் ஜூலை 25
மட்டுவில் வடக்கு கண்ணகி சனசமூக நிலைய புதிய நிர்வாகிகள் வருமாறு:-

தலைவர் திரு. வை. சம்மந்தன் உபதலைவர் திரு. க. வேலாயுதபிள்ளை, செயலாளர் திரு. க. சின்னராசா, உபசெயலாளர் திரு. சு. இராசரத்தினம். பொருளாளர் திரு. சி, கோபாலபிள்ளை.

6 நிர்வாக உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-75

## அற்புதர்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அரசன்அரசாண்டபோது துலுக்கர் படையினால் சூழப்பட்டு, அப்படையெடுப்பில் பெண் திறை கொடுத்தால் மட்டுமே விட்டுக்கொடுக்க இடமுண்டு என எதிரிகளினால் அறிவிக்கப்படவே அரசனும் பத்தர்களும் புனிதரை நாடி வேண்டுதல் செய்ததும்,சத்துருக்கள் வசமிருந்து ஸ்பானியா தேசத்தைக் காக்க வெண் புரவியிலே வந்து சத்துருக்களை விரட்டியடித்ததாக வரலாறு உளது.

### உயிர் மீண்டவர்

1934 ஆம் ஆண்டில் முகப்பு அத்திவாரத்திற்குள் மண்சரிவினால் புதையுண்டிருந்து பல மணித்தியாலயங்களின் பின் உயிர் மீண்டவர் வரலாறும் உண்மையே. அதில் உயிர் மீண்டவரான திரு. ச. சவிரியான் இன்றும் உயிருடன் புனிதரின் அற்புதத்திற்குச் சான்றாக விளங்குகின்றார்.

### கொள்ளை நோயின்போது

கொள்ளை நோய் குருநகரைப் பீடித்தபோது அற்புதமாக அவரது புனித சுரூபம் பவனியாகக் கொண்டு ஊரைச் சுற்றிவந்தமையால் பக்தர்களை அந்த பெரு நோயிலிருந்து புனிதர் காத்ததும் நாம் அறிந்த உண்மைநிகழ்ச்சியாகும்.

இவ்விதமாக பக்தர்களைத் தம் பாதுசாவலில் வைத்துக் காப்பாற்றி வரும் புனிதரின் நாமம் என்றும் வாழ்வதாக.

## 127 ஆண்டுகள்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இடைப்பட்ட காலத்திலே நாம் பொழுது போக்கிற்காகக் சுற்றுக் கொண்ட கடற்தொழிலை தங்கள் சீவியத்துக்கு உயிர் ஊட்டும் தொழிலாகக்கைக்கொண்டனர். தமக்குப் பாதுகாவலரான யேசுநாதரின் அப்போஸ்தலர்களுள் ஒருவரும் மீன்பிடித் தொழிலைச் செய்தவருமான சந்தியோகுமையோரைத் தெரிந்து கொண்டனர்.

எனவே தமது தொழிலுக்கும் தமக்கும் பாதுகாவலராகத் தெரிந்து கொண்ட புனிதரின் பெயரில் இப் பிரமாண்டமான ஆலயத்தை அமைத்தனர்.

இப்பங்கு மக்கள் இவ்வாலயத்தின் பல நூற்றாண்டுகளைக் காண்பார்கள் என்பதில்சந்தேகமில்லை.


THE EXPRESS INSTITUTE KOPAY

## O/L88

DAY CLASS
காலை 8-00
பி-ப 1-00

### 4 மாத தீவிர பயிற்சி வகுப்பு

பிரிவு 1 ஆரம்பமாகியுள்ளது.

வருடம் தோறும் சிறந்த பெறுபேறுகளுக்கு தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழுவுடன் மேலும் சில விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை.

(C 5896)



## 90ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



மண்ணில்: 10 - 4 - 1963

விண்ணில்: (வீரசொர்க்கம்) 27 - 4 - 1988

### செல்வன் தவக்குமார் (முரளி, சாள்ஸ்)

அன்புச் செல்வமே தவக்குமார்!
உன்னோடு வாழ்ந்த இன்ப நினைவுகள் எங்களை எந்நேரமும் வதைக்கின்றனவே, என்செய்வோம்! பிறந்த மண்ணின் விடுதலை வேண்டி உனக்குள்ள சிறந்த செல்வம், கல்வி வசதிகள் எல்லாவற்றையும் தியாகம் செய்தாய்; நீ பிறந்த மண்ணினதும் அம்மண்ணில் வாழ் தமிழ் மக்களதும் அடிமைத் தளையை அகற்றுவதே உனது உயர்ந்த இலட்சியமாகக் கொண்டாய்! உன்னை நீயே அர்ப்பணித்துத் தேவனானாய். மூன்று உடலும் ஒருயிருமாக உன்னோடு இணைந்து போராடிய உயிர் நண்பர்கள்
ஜெயக்குமார் – இராகவன்
மூவருக்கும் எங்கள் கண்ணீர் அஞ்சலி!

பெற்றூர், சகோதரங்கள்,
உறவினர், நண்பர்கள்.

கப்புதூ,
கரவெட்டி.



## 30 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்



### கணபதிப்பிள்ளை மனோன்மணி

அன்னையின் மடியில்: 25- 5- 1938
ஆண்டவன் அணைப்பில்: 26- 6- 1988

காங்கேசன்துறை இடந்தரை ஒழுங்கையைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், திருமதி மனோரஞ்சிதம் (U.K), ஜெயரஞ்சிதம் (U.K), ஞானரஞ்சிதம், கலாரஞ்சிதம், ஆகியோரின் பாசமுள்ள தாயாரும், திரு. க. செல்வராஜா (U.K) அவர்களின் அன்பு மாமியாருமாகிய அமரத்துவமெய்திய திருமதி. கணபதிப்பிள்ளை மனோன்மணி எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் இருப்பிடமாய் அன்பின் திருவுருவாய் எம்மை எல்லாம் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய தெய்வமே! எம்மை விட்டு மறைந்தாலும் நீங்கள் என்றும் எமது இதயக் கமலத்தில் வீற்றிருப்பீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அமரத்துவமெய்திய எங்கள் குலவிளக்கின் ஈமக்கிரியைகளில் கலந்து அனுதாபம் தெரிவித்த உற்றார். உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். நேரில் நன்றி தெரிவிக்க முடியாமைக்கு மனம் வருந்துகிறோம்.

எமது தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் (இன்று) 25-7-88 திங்கட்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலையிலும் உத்தரக்கிரியை, சபிண்டீகரணம் ஆடி மாதம் 11 ஆம் [26-7-88] செவ்வாய்க்கிழமை பகல் அன்னாரின் அளவெட்டி இல்லத்திலும் நடைபெறும். அவ்வமயம் அன்றைய கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். நேரில் அழைப்பு விட முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

இங்ஙனம்
கணவன் கணபதிப்பிள்ளையும்
பிள்ளைகளும், மருமகனும்

கேணிக்கரை
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(C.5307)



## ஈழத்திலும்

### சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்

- ✶ பகவான் சத்தியசாயிபாபா நேரடிதரிசனம்
- ✶ தென்னிந்திய புனித ஸ்தல யாத்திரை
- ✶ நம்பிக்கையான (CANADA) பயண ஒழுங்கு

மேலதிக விபரத்திற்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரிகள்:

கிளை
24/11 பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

தலைமையகம்
33, 1ஆவது மாடி,
புதிய ஜெமினி கொம்பிளக்ஸ்
சென்னை - 6
தொலை பேசி: 475382.

✶ குறிப்பு: தென்னிந்திய புனித ஸ்தல யாத்திரை 10 . 8 . 88 ஆரம்பம்

(C 5710)



# Asanga Enterprises
## A. வாசன்

மகிழ்ச்சியுடன் அறியத்தரும்

## வெளிநாடு வேலை வாய்ப்புக்கள்

வடபகுதி மக்களுக்கு அரிய சந்தர்ப்பம்

### ★ மலேசியா

| | | | |
|---|---|---|---|
| கோழிப்பண்ணை வேலையாட்கள் | 40 | 400 | வெள்ளி |
| சமையற்காரர் | 3 | 500 | வெள்ளி |
| உதவிச் சமையற்காரர் | 5 | 400 | வெள்ளி |

5 வருட ஒப்பந்தம், உணவு, இருப்பிடம், மருத்துவம் இலவசம்.

28-7-88 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

செல்ல விரும்புவோர் எமது காரியாலயத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

மிகவும் பாதுகாப்பான, நிச்சயமான பிரயாண ஒழுங்குகள்

### ★ கனடா

குறுகிய காலத்துக்குள் பிரயாணத்தை மேற்கோள்ளலாம்.

### ★ புறூணை

கிளீனேர்ஸ் 15 பேர் US டொலர் 200

30 நாட்களுக்குள் பயணம் செய்ய முடியுமானவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

✶ 3 வருட ஒப்பந்தம். உணவு, இருப்பிடம் இலவசம்-

☆ சவூதி, குவைத்துக்கான வெற்றிடம் எம்மிடம் உண்டு. செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

## அசங்கா என்ரபிறைசர்ஸ்

இல. 32, 5ஆம் குறுக்குத்தெரு,
(பிலிப்ஸ் நேசிங்ஹோமுக்கு எதிரே)
யாழ்ப்பாணம்.

(C-5917)



## 5 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



### திரு. சின்னப்பு சத்தியேஸ்வரன் (சத்தி)

அன்னை மடியில்: 7-10-1951 — அரன் அடியில்: 25-7-1983

எங்கள் அருந்தவப் புதல்வ! ஆருயிர்த் தம்பி! நீ உன் பெற்றோர் சகோதரரை விட நாட்டு மக்களையே பெரிதென நினைத்து அம் மக்களின் விடிவிற்காகவும், தமிழ் மண் மீட்பிற்காகவும் உன் உயிரை அர்ப்பணித்தாய். ஆனால் நாமோ உன் உயிரற்ற உடலைக் கூடக் காண முடியாத பாவிகளாய் அணு அணுவாய்ச் செத்துக்கொண்டிருக்கின்றோம். உன் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்,

அன்பு
பப்பா, அம்மா,சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்கள்,மைத்துனி,மருமக்கள்.

''திருத்தணிகை''
அச்சுவேலி வடக்கு.

( 5270 )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு.

**பொருள்:**

விரிவான அறிவுத் துறையை அறிந்து உணர்கின்றவரின் முன்னே குற்றப்படுதல், ஒழுக்க நெறியில் இருந்து நிலை தளர்ந்து கெடுவதைப் போன்றதாகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22703

25-07-1988 த. பெ. இல. 23


## வெலிக்கடைப் படுகொலைகள்

**ஜூலை**, ஆகஸ்ட் மாதங்கள் இலங்கையின் அண்மைக்கால அரசியல் வரலாற்றில் வன்செயல் மாதங்களாகப் பெயர் பெற்றவை!

இனவாத அடிப்படையிலான கலவரங்கள், குழப்பங்கள், உயிர்க்கொலைகள், உடைமைச் சேதங்கள் என்பன இந்த இரண்டு மாதங்களிலும் பெரிய அளவிலும், உக்கிரமாகவும் நடந்ததை வரலாறு சொல்லும்.

எனினும், 1983 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ''கறுப்பு ஜூலை'' சம்பவங்கள் புறம்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவை. சிங்களப் பேரினவாதம் உச்சக்கட்டத்துக்கு உருக்கொண்டு, ஊழித்தாண்டவம் ஆடி, தமிழர்களின் இரத்தம் குடித்த ஈனத்தனம் நிறைந்தவை அந்தச் சம்பவங்கள்.

கடந்த மூன்று தசாப்தங்களாகத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனவெறிக்குச்சிகரம் வைத்தது போல அமைந்து, உலக அபகீர்த்தியைத் தேடிக் கொண்டவை ''கறுப்பு ஜூலை'' சம்பவங்களே.

நினைக்கவும் நடுங்கும். சொல்லவும் உணர்வு அடங்கும் அளவுக்கு படுபயங்கரங்கள் இழைக்கப்பட்ட ''கறுப்பு ஜூலை'' கொடுமைகள் தமிழர்கள் என்றும் மறந்துவிட முடியாதவை.

அவற்றிலும் 1983 ஜூலை 25, ஜூலை 27 வெலிக்கடைப் படுகொலைச் சம்பவம் ஈழத்தில் மட்டுமல்ல, உலகின் எந்தப் பகுதியிலும் ஒரு தமிழனே வாழ்ந்தாலும் கூட, அவனது அடிமனதில் இருந்து அகற்ற முடியாத ஆழமாகப் பதிந்த வடு ஆண்டு ஐந்து போனாலும் நேற்றுப்போல மனதை நெருடும் அட்டூழியம் அக்கிரமம்.

உலக வரலாற்றில் பயங்கரமானவர்கள், கொடூரமானவர்கள், மிருகத்தனம் மிகுந்தவர்கள் என்று கருதப்படும் யூதர்களும் செய்யத்துணியாத, நாகரிக உலகில் நினைத்தும் பார்க்க ஒண்ணாத பயங்கரப் படுகொலைகள்— வெலிக்கடைச் சிறையில் நடந்த 53 தமிழர்களின் படுகொலைகளுமாம்.

அரசாங்கப் பாதுகாப்பில் இருந்த 53 தமிழ்க் கைதிகள் காட்டுமிராண்டித் தனமாகக் குத்திக் குதறப்பட்டார்கள் ஜூலை 25 இலும் 27 இலும்.

அந்த இரு நாட்களும் ஆண்டாண்டு காலமாக கரிநாட்களாக, துக்கதினங்களாகத் தமிழர்களால் அனுஷ்டிக்கப்பட வேண்டியவை.

அந்தச் சம்பவங்கள் தமிழர் அரசியல் போராட்ட முன்னேற்றத்துக்கு புதுவழி காட்டியவையாக — திருப்பு முனையாக அமைந்ததையும் மறந்து விடலாகாது.

அது நிற்க. தென்னிலங்கை வதை முகாம்களாம் சிறைச்சாலைகளிலும், படையினர் தடுப்பு முகாம்களிலும் இன்னமும் தமிழர்கள் அரசியல் கைதிகளாக இருப்பது பெருவேதனைக்கு உரியதாகும். அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு, அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று ஒரு வருடத்துக்கு முன்னரே ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்ட போதிலும் சுமார் 800 தமிழ்க் கைதிகள் இன்னமும் சிறைவாசம் அனுபவிப்பது அரசியல் சதுரங்கத்தின விளைவன்றி வேறல்ல.

சிறைக்கூடத்தில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் மட்டுமன்றி, தமிழ் மண் எங்கும் வாழும் தமிழ் மக்களும் அரசியல் சிறையில் வாடுகிறார்கள். எல்லோரும் எப்போது சுதந்திர புருஷர்களாக விடுதலை உலகுக்கு வரமுடிகிறதோ: அதனைக் காண முடிகிறதோ அன்றே தமிழர் இன்னல் தீரும். அந்த நாள் மலர்வதற்கு மக்களின் விடுதலை உணர்வு மழுங்கிவிடாமல், மேலும் ஆதர்சம் பெற வேண்டும். அதனை இன்றைய நாளில மனதில் விதைத்திடுதல் மிகவும் பொருத்தமானது.

ஆப்கானிஸ்தான்:

# சோவியத் துருப்புக்கள் முற்றாக விலகினால் காபூல் கம்யூனிஸ்ட் அரசு கவிழும்!

## படைத் தளபதி எச்சரிக்கை

மாஸ்கோ, ஜூலை 24

சோவியத் துருப்புக்களின் துணை இல்லாவிடில் காபூலில் உள்ள டாக்டர் நஜிபுல்லா தலைமையிலான கம்யூனிஸ்ட் அரசு கவிழ்ந்து விடும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

காபூலில் உள்ள சோவியத் துருப்புக்களின் தளபதி இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

கிளர்ச்சிக்காரர்களின் உதவியுடன் அரசாங்கத்தை நடத்துவதற்கான முயற்சியில் ஆப்கன் ஜனாதிபதி டாக்டர் நஜிபுல்லா தோல்வி கண்டுவிட்டார் என்று அவர் அறிவித்தார்.

சோவியத் துருப்புக்கள் முற்றாக அகற்றப்பட்ட பின்னர் ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சியில் கெரில்லாக் குழுக்களிடையேமோதல் ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, சோவியத் துருப்புகளை ஆப்கானில் இருந்து வாபஸ் வாங்குவதை சோவியத் அரசு இடைநிறுத்தி வைத்துள்ளது என்று பாகிஸ்தான் அதிபர் ஸியா கூறியது மறுக்கப்பட்டுள்ளது.

சோவியத் இராணுவத் தளபதியே இம் மறுப்பு அறிக்கையைவிடுத்தார்.

பாகிஸ்தான் அதிபர் ஸியா தனது குற்றச்சாட்டில், ''வாபஸ் வாங்குவது இடை நிறுத்தப்பட்டு மேலதிகமாக 12 ஆயிரம் துருப்புக்களை ஆப்கானுக்குள் சோவியத் அரசு அனுப்பிவைத்துள்ளது''— என்று கூறியிருந்தார்.

## மக்கள், காங்கிரசை நம்பட்டும் அதற்கு பிறகுதான் தேர்தல்!

''தமிழக மக்கள் அனைவரும் காங்கிரஸ் மீது நம்பிக்கை வைத்த பிறகுதான் தேர்தல் நடைபெறும் என அருணாசலம் ராஜபாளையத்தில் பேசினார்.

**ஊழியர் கூட்டம்**

ராஜபாளையத்தில் இ. காங்கிரஸ் ஊழியர் கூட்டம் நடந்தது. சிவகாசி நாடாளுமன்ற தொகுதி காங்கிரஸ் அமைப்பாளரான ராஜபாளையம் நகராட்சி தலைவர் ஏ. ஏ. சுப்பராஜா தலைமையில் இது நடைபெற்றது.

மத்திய மந்திரி எம். அருணாசலம் இதில் கலந்து கொண்டு பேசியதாவது:-

**கொழுத்த அதிகாரிகள்**

கடந்த 20 ஆண்டு காலமாக அதிகாரிகள் லஞ்சம் வாங்கி கொழுத்துப்போய் இருக்கிறார்கள். இப்போது நீங்கள் கூறினால் கேட்கத்தான் மாட்டார்கள். காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வரக்கூடாது என்பதில் அதிகாரிகள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். மீண்டும் திராவிட இயக்க ஆட்சி வந்தால் ஊழல் செய்ய வாய்ப்பிருக்கும் என்று நம்புகிறார்கள்.

மக்களிடம் செல்வாக்கு பெற்றவர் ளையும்- களத்தில் இறங்கி வேலை செய்பவர் ளையுமே எம் எல். ஏ தேர்தலில் நிற்க வைப்போம்.

**பிறகுதான் தேர்தல்**

திராவிட இயக்கங்கள் தமிழ் நாட்டை அழிவுப் பாதைக்குக் கொண்டு சென்று விட்டார்கள். காங்கிரஸ் கட்சி சார்பில் வீடுவீடாக சென்று வாக்காளர்களை சந்தியுங்கள். மக்கள் அனைவரும் காங்கிரஸ் மீது நம்பிக்கை வைக்கட்டும்.

அதன்பின் தேர்தலை வைத்துக் கொள்வோம்.

இவ்வாறு அவர் பேசினார். (எ-4)

## கை சுத்தம் என்றால் கணக்கைக் காட்ட வேண்டியதுதானே!

சென்னை ஜூலை 24

ஒன்றேகால் கோடி ரூபா, 80 லட்சம் ஆகக் குறைந்தது எப்படி?

இப்படி ஜெயலலிதாவைக் கேட்டிருக்கிறார் முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு.

அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் சொன்னதாவது:

தெருவில் போகிறவனுக்கு எல்லாம் கணக்குக் காட்டவேண்டியது இல்லை என்று ஜெயலலிதா கேட்கிறார்.

நாங்கள் கேட்கும் கணக்குகளுக்கு முறையாகப் பதில் சொல்ல வேண்டுமேதவிர சேற்றை வாரி வீசிப்பயனில்லை.

கை சுத்தம் என்றால் கையைத் திறந்து கணக்கைக் காட்ட வேண்டியதுதானே.

அடுத்த முதல்வர் ஜெயலலிதா என்று சிலர் கூறுகிறார்கள். அளவுகோல் படித்தவர்கள் கையில் இருந்தால் அது அளவு கோலாக இருக்கும் குருடர்கள் கையில் இருந்தால் அது ஊன்றுகோலாகத்தான் இருக்கும் என்ற அர்த்தத்தில்தான் அப்படிப் பேசியதாக முன்னாள் அமைச்சர் சவுந்திரராஜன் சொன்னார்.

இப்படி திரு. திருநாவுக்கரசு சொன்னார். (எ)

**சேருவார்களா?**

திருச்சி, ஜூலை 24

பண்ருட்டி இராமச்சந்திரன், திருநாவுக்கரசு ஆகியோர் காங்கிரஸில் சேர முன் வந்தால் ஏற்றுக் கொள்ளுவோம்

இப்படி மத்திய அமைச்சர் எம். அருணாசலம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

**வெளி உலகில்**

## பெரு நாட்டில் தாக்குதல்

லிமா ஜூலை 24

பெரு நாட்டில் இடதுசாரிக் கெரில்லாக்கள் நடத்திய தாக்குதலில் நான்கு பொலீஸாரும் மூன்று பொதுமக்களும் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

## மக்காவில் 10 லட்சம் யாத்திரிகர்கள்

ரியாத், ஜூலை 24

130 நாடுகளைச் சேர்ந்த பத்து லட்சம் யாத்திரிகர்கள் சவூதி அரேபியாவில் மக்கா புனித தலத்தில் குழுமியிருக்கின்றனர்.

ஹஜ் பெருநாளைக் கொண்டாடுவதற்காகவே இவர்கள் குழுமியிருக்கின்றனர். (ஓ-எ)

## ஈரானின் போர் முரசு!

தெஹ்ரான், ஜூலை 24

உடல்வலுவுள்ளவர்கள் அனைவரும் உடனடியாக போர் முனைக்குச் செல்லும்படி ஈரான் அரசு தனது பிரசைகளுக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

தெஹ்ரான் வானொலி நேற்று இந்த வேண்டுகோளை தனது வழமையான ஒலிபரப்புகளுக்கு மத்தியில் அறிவித்து [illegible] (ஓ-எ)

**உகண்டாவில் மோதல்**

கம்பாலா ஜூலை 24

உகண்டாவின் வடபகுதியில் கிளர்ச்சிக்காரர்களுக்கும், அரசுத் துருப்புகளுக்கும் இடையே நடந்த மோதல் ஒன்றில் 75 கிளர்ச்சிக்காரர்களும், 9 அரசுத் துருப்பினர்களும் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

**கலப்பட எண்ணெ: 500 பேர் சுகயீனம்!**

கல்கத்தா ஜூலை 24

கலப்படம் செய்யப்பட்ட மரக்கறி எண்ணெயில் தயாரிக்கப்பட்ட உணவை உண்ட சுமார் 500 பேர் கல்கத்தா அரசு மருத்துவ மனையில் நேற்று அனுமதிக்கப் பட்டனர்.

அவர்களில் ஆறுபேரின் நிலைமை ஆபத்தாக இருப்பதாக அறிவிக்கப் பட்டது.

மரக்கறி எண்ணெயை சோதனை செய்து பார்த்ததில் அதில் நச்சுத்தன்மை கலந்து இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. (எ)

## பர்மா ஜனாதிபதி ராஜினாமா

ரங்கூன், ஜூலை 24

பர்மாவின் அரசுதலைவர் ஜெனரல் நீவின் நேற்று ராஜினாமாச் செய்தார்.

ஆளும் சோஷலிஸ்ட் கட்சியின் மாநாட்டில் தனது முடிவை 78 வயதான ஜெனரல் நீவின் எதிர்பாராத விதமாக அறிவித்தார்.

ஒரு கட்சி அரசியல் தொடர்ந்து அமுல் நடத்தப்படவேண்டுமா? என்பதுபற்றி மக்களின் கருத்தை அறிய சர்வசன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படும் என்று ஜெனரல் நீவின் மேலும் தெரிவித்தார். (ஓ-எ)

# தண்டனைக்காலம் முடிந்ததும் மீண்டும் பல்கலைப் படிப்பு

## ஈரோஸ் உறுப்பினரான மாணவருக்குச் சலுகை

கொழும்பு, ஜூலை 25

தண்டனைக்காலம் முடிந்த பின்னர் எதிரியான மாணவனை மீண்டும் பல்கலைக்கழகத்தில் சேர்க்கத் தயாராக இருப்பதாக பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் டாக்டர் அலுவிஹார கொழும்பு மேல் நீதி மன்றத்தில் தெரிவித்தார்.

இது பற்றிய விவரம் வருமாறு:

பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் வன்னிய சிங்கம் பவாரன்.

1.1.84க்கும் 27-3-1986க்கும் இடையில் ஈரோஸ் உறுப்பினராக இருந்தது, இயக்கத்தைச் சேர்ந்த சிலர் பற்றிய தகவலைக் கொடுக்கத் தவறியது ஆகிய குற்றச்சாட்டுக்கள் இவர் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்டிருந்தன.

இந்த வழக்கு அண்மையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் விசாரணைக்கு வந்தபோது உபவேந்தர் டாக்டர் அலுவிஹாராவும் பொறியியல் பீட மாணவ ஆலோசகர் பேராசிரியர் ஜெயதிலகாவும் ஆஜரானார்கள்.

இருவரும் நீதிபதியிடம் சொன்னதாவது;

பேராசிரியர், சர்ஜன், பெற்றோர் என்ற முறையில் வன்செயலை நாம் ஆதரிக்க முடியாது. ஆசிரியர் என்ற முறையில் இந்த மாணவனுக்கு உதவ விரும்புகின்றோம். மாணவனுக்குத் தண்டனை விதிக்கப்பட்டால் தண்டனைக் காலம் முடிந்த பின்னரும் மாணவனை பல்கலைக்கழகத்தில் நாம் சேர்க்கத் தயாராக இருக்கின்றோம்'.

நீதிபதி: 'உங்கள் இருவரையும் இந்நாட்டு நீதிமன்றம் பாராட்டுகிறது. ஏனைய பல்கலைக்கழக நிர்வாகங்களுக்கு இது ஒரு உதாரணமாக இருக்கட்டும்'— (இ-எ)

## பரியாக்கோபு ஆலயம் 160ஆவது நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 25

நல்லூரிலுள்ள பரியாக்கோபு ஆலயம் தனது 160ஆவது ஆண்டு நிறைவு விழாவை இன்று திங்கட்கிழமை கொண்டாடுகின்றது.

இதனை முன்னிட்டு விசேஷ வழிபாடுகள், வேதபடிப்புகள், இன்னிசை கீதங்கள் ஆகியவை இன்று நடைபெறுகின்றன.

அ நட்டிங். கலாநிதி டொனல்ட் கனகரத்தினம் வழிபாடுகளை நடத்தி வைப்பார். (இ)

பெரும்பாலும் சிங்களவரான

## நடைபாதை வியாபாரிகள் அகற்றப்பட்டு விட்டனர்

திருகோணமலை, ஜூலை 25

திருகோணமலையில் புதிய மரக்கறிச் சந்தை திறந்துவைக்கப்பட்டதை அடுத்து நடைபாதை வியாபாரிகள் எல்லோரும் நடைபாதையிலிருந்து அகற்றப்பட்டுள்ளனர்.

மத்திய வீதியில் ஆடிக்கடைச் சந்தியிலிருந்து மணிக்கூட்டுக் கோபுரம் வரை இருந்த நடைபாதை வியாபாரிகள் அனைவரும் அகற்றப்பட்டுள்ளனர்.

இவர்களில் அனேகர் சிங்கள வியாபாரிகள்.

இவர்களில் பலர் புதிய சந்தைப்பகுதிக்குள் சென்று வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேபோன்று [illegible] மீன் சந்தைப் பகுதியில் [illegible] பாதை வியாபாரிகளும் [illegible] பகுதிக்குள் அனுப்பப் பட்டுள்ளனர். (இ-150)

## சோதிடம் பார்த்துவிட்டு வந்தவர் கொலை!

மட்டக்களப்பு ஜூலை 25

சோதிடம் பார்த்துவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த வாலிபர் ஒருவர் வழிமறிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் அண்மையில் காத்தான் குடியில் நடைபெற்றது.

செல்வாநகர் ஆரை [illegible] சந்திரசேகரம் சுரேஷ் (21) [illegible] தான் மேற்படி இளைஞர். (இ-21)

## குட்டிமணி ஜெகன்---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

னார்கள் தமிழ்ப்போராளிகள் பலருக்குக் காயம் ஏற்பட்டது. தமிழ்க் கைதிகள் போர்வையால் கதவை இழுத்துப் பிடித்த போது சிங்களக் காடையர் போர்வைகளைக் கோடரிகளினால் கொத்தினார்கள். இப்படியே சிறிது நேரம் போராட்டம் நீடித்தது. இதே சமயம் மேல் மாடியிலிருந்த தமிழ்க் கைதிகள் தம்மைப் பாதுகாக்கத் தயாரானார்கள். மதகுருமார்களுக்குக்குப் பூசைசெய்ய மேஜை ஒன்று கொடுக்கப்பட்டு இருந்தது. மேல்மாடிக்குச் சுமார் 50 காடையர்கள் வருவதைக் கண்டதும் அவர்கள் மேசைக் கால்களை உடைத்துக் கையிலெடுத்துக் கொண்டனர்.

வெளியிலிருந்த காடையர் கம்பிகளினாலும், தடிகளினாலும் குத்தினார்கள். வெளியிலிருந்து காடையர் எறிந்த கம்பி ஒன்று தமிழ்க் கைதிகள் வசம் கிடைத்தது. நீண்ட நேரமாக ஜீவமரணப் போராட்டம்.

**ராஜசுந்தரத்துக்கு வந்த நிலைமை**

குண்டர்கள் அறைக் கதவை ஒரேயடியில் உடைத்து விட்டனர். டாக்டர் ராஜசுந்தரம் கதவருகே சென்று சிங்களத்தில் ''நாங்கள் சகோதரர்கள். உங்களுக்கும், எங்களுக்கும் என்ன பிரச்சினை? எங்களை ஏன் கொல்ல வருகிறீர்கள்?'' என்று கூறியபொழுது அவர் வெளியே இழுக்கப்பட்டார். தலையில் பலமான ஒரு அடி, டாக்டர் ராஜசுந்தரத்தின் தலை பிளந்து இரத்தம் ஆறாக ஓடியது அத்துடன்பலபு உயிர்களைக் காப்பாற்றிய உயிர் பிரிந்தது. இடையிடையே மேலேயிருந்த தமிழ்க் கைதிகள் கதவுக்கம்பிக்கு ஓங்கி அடித்துச் சத்தம் எழுப்பியபோது, சிங்களக் காடையர்கள் பின்வாங்கினார்கள்.

27-7-1983 அன்று 18 தமிழ்ப் போராளிகள் படுகொலை செய்யப்பட்டார்கள். 19 பேர் தமது பயங்கர அனுபவங்களுடன் தப்பிப் பிழைத்தனர்.

வெலிக்கடையில் கொல்லப்பட்ட தமிழ்க் கைதிகளின் உடல்களை, அவர்களது பெற்றோர், மனைவி, மக்கள், உறவினர், நண்பர்கள் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. கைதிகளின் உடல்கள் அவர்களது விருப்பத்திற்கு மாறாக ஸ்ரீ லங்கா மண்ணில் சங்கமமானது.

(1983 ம் ஆண்டுஜூலை மாதம் 25 ம், 27ம் திகதிகளில் நடைபெற்ற சம்பவங்கள் நாகரிக உலகில் மிகக் கேவலமாகக் கருதப்படும் ஒரு சம்பவமாகும். ஆம்! சிறீலங்காவின் சிறைகளில் ஒன்றாகிய 'வெலிக்கடை'ச் சிறைப் படுகொலைகள் மனித உலகால், ஒரு போதும் மறக்கப்பட முடியாத மிகக்கொடிய சம்பவமாகும். இக்கட்டுரை, நேரில் கண்ட ஒருவரின் அனுபவத்துடன், தமிழ்ப் பொலீஸ் அதிகாரி ஒருவரோடு நடத்திய பேட்டியையும் மையமாக வைத்து எழுதப்பட்டதாகும்.)

## பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 25

யாழ். மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட சுமார் 534 மாணவர்களுக்கு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

பிரஸ்தாப வகுப்புகள் யாவும் மாணவர்களின் இருப்பிடங்களைக் கருத்தில் கொண்டு பின்வரும் நிலையங்களில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

1. யாழ். இந்துக்கல்லூரி, 2. யாழ். இந்து மகளிர் கல்லூரி, 3. தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, 4. சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, 5. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், 6. மானிப்பாய் இந்துக் கல்லூரி.

இது சம்பந்தமான கடிதங்கள் யாவும் மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடிதங்கள் கிடைக்கப் பெறாத மாணவர்கள் தத்தம் இருப்பிடங்களுக்கு அண்மையிலுள்ள நிலையத்தில் 1 8.88 ஆம் திகதி காலை 9 மணிக்குச் சென்று விசாரிக்கும் படி கேட்கப்படுகின்றனர்.

இம் மாணவர்களுக்கான செய்முறை மெருகூட்டல் நிகழ்ச்சித்திட்டம் (Practical Orientation Programme) ஆகஸ்ட் மாத இறுதியில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மேற்படி தகவல்களை சம்பந்தப்பட்ட பயிற்சி வகுப்புகளின் மாவட்ட உதவி இணைப்பதிகாரி திரு. ஆர். கே. குலசேகரம் அனுப்பியுள்ளார். (இ-6)

**ஷெல் தாக்குதல்**

புதுக்குடியிருப்பு இந்திய அமைதிப்படை முகாமிலிருந்து கடந்த புதன்கிழமை ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் இப்பகுதி மக்கள் பதற்றம் அடைந்தனர். பாடசாலைகள் உடனடியாக மூடப்பட்டன. (ஓ-126)

இலங்கையில் 60 சதவீத மானோர்

## பாதுகாப்பற்ற கிணறுகள் நீரோடைகளை பாவிக்கின்றனர்

கொழும்பு ஜூலை 25

இலங்கையின் 1 கோடி 65 லட்சம் மக்களில் 60 சதவீதமானோர் குடிதண்ணீருக்காக பாதுகாப்பற்ற கிணறுகள், ஆறுகள், நீரோடைகளைத்தான் நம்பியுள்ளனர்.

இத்திடுக்கிடும் தகவலை யுனிசெப் ஸ்தாபனத்தின் திட்ட அதிகாரி திரு. அவுஸ்ஷின்கொழும்பில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் வெளியிட்டார்.

இலங்கையும் குடிதண்ணீர் சகாப்தமும் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில், ''நாட்டில் உள்ள 10 ஆயிரம் பாடசாலைகளில் 25 வீதமானவற்றில் மலசல கூட வசதிகள் வழங்கப்படவில்லை'' என்றும் குறிப்பிட்டார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KAILAS Kalnar Tooth Powder
2. கைலாஸ் கல்நார் பற்பொடி
இப்பற்பொடியை தினமும் பாவித்து வந்தால் பல்வலி, முரசுகரைதல் வாய் நாற்றம், பல்அரணை, பல்கூச்சம், பல்ஆட்டம், பல்சீழ்வடிதல் முதலிய பல்வியாதிகளும் குணமாகும்.
விலை 1 பக்கற் 1/-
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
5(76), பெரியகடை, யாழ்ப்பாணம்.

# உதயன்

25 - 07 - 1988 திங்கட்கிழமை

1. R. S. Pathy Marunthu
இது தலைவலி, ஜலதோஷம், காய்ச்சல், கைகால் உளைவு, வலி, குத்து, நோவு வாதம், வேதனை முதலியவைகளுக்குச் சிறந்தது.
விலை: சின்னப்போத்தல் 8/-
பெரியபோத்தல் 16/-
தயாரிப்பு -
ஆர். எஸ். பதி அன் கோ, மதுரை
கிடைக்கும் இடம்:-
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
5(76), பெரியகடை, யாழ்ப்பாணம்.

## புறக்கோட்டைப் பகுதி சுற்றி வளைப்பு: 98 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 25 கடந்த வியாழக்கிழமை இரவு கொழும்பு புறக்கோட்டைப் பகுதியைச் சுற்றி வளைத்த பொலீஸார் 98 பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

இவர்களில் 70 பேர் தமிழர்கள் என்று தெரிகிறது. கதிரேசன் வீதி, செட்டியார் தெரு ஆகிய பகுதிகளே சுற்றிவளைக்கப்பட்டன.

கதிரேசன் வீதியில் போட்டிக் குழுக்களிடையே ஏற்பட்ட துப்பாக்கி மோதலைத் தொடர்ந்தே இத்தேடுதல் நடத்தப்பட்டதாம். (ஒ-எ)

Neems Agencies
OFFER
Employment in
SINGAPORE
for MALES
ATTRACTIVE SALARY
Requirements:
Very good knowledge of English
Attractive Personality.
Age - below 30 years.
Contact:
A. K. Sivagnanam
171 A, Brown Road,
JAFFNA.
Licence No. 585
Approval No 585 / 1 / 88 (5134)

DIPLOMA IN NURSING
9ஆம் பிரிவுக்கான
புதிய தாதிப் பயிற்சி நெறி
ஆரம்பம்: 27 - 7 - 1988
அரசாங்க தகுதிபெற்ற மருந்தாளர், தாதியர், பல்கலைக்கழக வைத்தியர் அடங்கிய விரிவுரையாளர் குழு.
மேலதிக விபரங்களுக்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St.Peters Lane,
JAFFNA
(C5879)

## 5- ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்: காசிப்பிள்ளை சுரேஸ்குமார்

ஆண்டவன் படைப்பு அநியாய அழிப்பு

03. 10. 1953 25. 07., 1983

நீர் மறைந்து ஐந்தாண்டுகள் ஆயினும் எம்முடன் நீர் இருப்பது போலவே உணர்கிறோம் கொடியவரின் இனவெறிக்கு கொதித்திட்ட 83 இல் மடிந்தாய் உன் உயிரற்ற உடலைக் கூடக் காணுந்பாக்கியமிழந்தோம். உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் என்றும் துயருறும் அன்பு அம்மா, அண்ணா, அக்கா, மைத்துனர், குட்டி மருமகன்.

வேலணைமேற்கு,
வேலணை 6. (5130)

## வதந்திகள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு விடுதலைப் புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 25 திட்டமிட்டுப் பரப்பப்படும் வதந்திகள் குறித்து மக்களைக் கவனமாக இருக்குமாறு தமிழீழவிடுதலைப் புலிகள் அறிக்கை மூலம் மக்களைக் கேட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக விடுதலைப்புலிகள் இயக்க (யாழ்ப்பாண) அரசியற் பிரிவு விடுத்த அறிக்கை வருமாறு:-

இன்றைய நெருக்கடியான சூழ்நிலையைப் பயன்படுத்திச் சில விஷமிகளால் திட்டமிட்டுப் பல வதந்திகள் பரப்பப்படுகின்றன.

நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மக்கள் வாழும் பிரதேசங்களை விட்டு இடம் பெயரச் சொல்லியோ அல்லது கால வரையறையின்றிக் கடைகளைப் பூட்டச் சொல்லியோ கோரிக்கை விடவில்லை.

மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி எம்மில் இருந்து மக்களை அந்நியப் படுத்தும் நோக்குடனேயே வதந்திகள் பரப்பப்படுகின்றன.

இவைகுறித்து மக்களை எச்சரிக்கையாக இருக்கும்படியும் மக்களின் நாளாந்த வாழ்க்கையைக் குலைக்க முயலும் சக்திகளுக்கெதிராக நாம் கடுமையான நடவடிக்கை எடுப்போமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம் — என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ-க)

## நிரந்தர இணைப்பா? பேச்சுக்கே இடமில்லை என்கிறார் காமினி!

கொழும்பு, ஜூலை 25 வடக்கு-கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைப்பதா? அந்தப் பேச்சுக்கே இடமில்லை.

அமைச்சர் காமினி திஸநாயக்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் சொன்னதாவது;

மாகாண சபைகளுக்கு மேலும் அதிகாரங்களை வழங்குவதற்கான தேவை தற்போது ஏற்படவில்லை. தற்போதைய அதிகாரப் பரவலாக்கல் திட்டம் போதுமானது. நடைமுறையில்காலத்துக்கு காலம்புதியவற்றைச் சேர்த்துக்கொள்ளலாம். அதுதான் நியாயமானது-

இப்படி அமைச்சர் காமினி திஸநாயக்கா தெரிவித்தார். (ஒ-எ)

## இன்று

யாழ்ப்பாணம், ஜூலை25 மாணவர் கலை இலக்கிய மன்றத்தின் அங்குரார்பணக் கூட்டம் ஒன்று திருநெல்வேலி இளம் இந்து இளைஞர் சங்க கட்டடத்தில் நடைபெற உள்ளது.

இந்தக்கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (ஒ-9)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கந்தசாமி
பிரேம்சந்திரகுமார்
(Msc பொறியியலாளர்)
பிறப்பு: 11. 11. 1949
இறப்பு: 25. 07. 1983

எம் மகனே!
நீர் மடிந்து ஆண்டு ஐந்தாகிடினும்
உம் உடல் மண்ணோடு மண்ணாய்
மறைந்தாலும்
நின் உருவம் எம் நெஞ்சில் நிலையாய்
நிற்கின்றது.
உன் ஆத்மா சாந்தி அடையட்டும்.
உம் பிரிவால் என்றும் துயருறும்
அன்புப் பெற்றோர்.
122 சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.
(5344)

## தமிழர் . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி) கூடிய அதிகாரப்பகிர்வு, கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளுக்காகத் தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கம் போராடுகிறது.

### மக்கள் ஆதரவு புலிகளுக்கே

பொதுமக்கள் ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு உண்டு. பொது மக்கள் ஆதரவு இல்லாவிட்டால் 2,000 பேரை மட்டும் கொண்ட அந்த இயக்கம் இவ்வளவு நீண்ட காலத்துக்கு எப்படி போராட முடியும்?

இரண்டு அரசுகளுக்கு இடையேயானது இந்த அமைதி உடன்பாடு. இதற்குச் சரியான மாற்றுத்திட்டம் இலங்கை அரசுக்கும் தமிழருக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்றைஉருவாக்குவதே. அந்த ஒப்பந்தத்துக்கு இந்திய அரசு உத்தரவாதியாக இருக்கவேண்டும்.

இலங்கை அரசுடன் தமிழர் நேரடியாகப் பேசியிருந்தால் தமிழர் தங்களுக்கு என்ன தேவை என்பதை தெளிவாகச்சொல்லிஇருப்பர். தற்போதைய முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கமாட்டா.

இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார். (ஒ-எ)

## 29-ல் ஹர்த்தால்-----

(1-ம்பக்கத்தொடர்ச்சி) அடிமையாக்கவே முயலும் இலங்கை -இந்திய ஒப்பந்தத்தைத் தமிழ் மக்கள் எத்துணை இடர் வரினும் ஏற்றுக்கொள்ள மாட்டார்களென உலகிற்கும் இந்தியாவுக்கும் உணர்த்துமுகமாக ஒப்பந்த ஒருவருட நிறைவு நாளான எதிர்வரும் 29-7-1988 ஆம் திகதி அன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அன்று உயர்தர பரீட்சை நடைபெறுவதற்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் தவிர்ந்த எந்தவித வாகனப் போக்குவரத்தையும் மேற்கொள்ள வேண்டாமெனவும், கடைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், பொதுத் தாபனங்கள், அரச அலுவலகங்கள் எல்லாவற்றையும் பூட்டி எதிர்ப்புத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-க)

## அனுரா . .

[1-ம்பக்கத் தொடர்ச்சி] அதிகாரப் பகிர்வு அமையவேண்டும். இது வழமைக்கு மாறானது அல்ல. அதிகாரப்பரவலாக்கல் கோரிக்கை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்துதான் எழுப்பப்பட்டது.

எப்படியாயினும் சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் இது விஷயத்தில் இறுதி முடிவை எடுக்கும் என்று அவர் கூறினார். (ஒ-எ)

## சர்வசன----

(1ம் பக்கத் தொடர்ச்சி) டாரநாயக்காவின் திட்டமே இது. இதற்கான சட்டமூலத்தை திரு. பண்டாரநாயக்கா உள்ளூராட்சி அமைச்சராக இருந்தபோது கொண்டு வந்திருந்தார்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் தற்சமயம் வசிக்கும் இடத்தில் இருந்து வாக்களிக்க ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

இப்படி திரு ஜெயவர்த்தன தனது பேட்டியில் தெரிவித்தார். (ஒ-எ)

## தாக்கவில்லை'..

(1ம்பக்கத் தொடர்ச்சி] றது.

இம்மாதம் 19 ஆம் திகதி உதயன் ''நேற்று இடம்பெற்ற தேடுதலும் ஷெல்லடியும்'' என்ற தலைப்பில் வெளியான செய்தியில் குறிப்பிட்டிருந்த தகவல்களை ஒட்டியே, அமைதிப்படை இவ்வாறு அறிவித்திருக்கிறது.

''தேடுதலின்போது ஒருவரும் தாக்கப்படவில்லை. பெண்கள் குழந்தைகள், வயோதிபர், ஆசிரியர், மருத்துவர், மாணவ, மாணவிகள் ஆகியோருக்கு மதிப்புக் கொடுத்து மக்களுக்கு உதவி வருகிறோம்'' என்றும் அந்த அறிக்கை கூறுகிறது. (அ)

## முள்ளிய---

(1ம் பக்கத் தொடர்ச்சி) முல்லைத்தீவிலிருந்து யாழ் நோக்கிப் பயணத்தை மேற்கொண்டது. அது முற்பகல் 11 மணியளவில் முள்ளியவளையை அண்மித்தது.

அவ்வேளையில் வீதியின் நடுவே பெரும் சத்தத்துடன் குண்டு ஒன்று வெடித்தது. குண்டு வெடித்தபோது சம்பவம் நடந்த இடத்திலிருந்து வ. பி. போ. சபையின் பஸ் சுமார் 50 யார் தூரத்தைக் கடந்துவிட்டதாம்.

இதனால் பஸ் பிரயாணிகள் அதிர்ச்சிக்குள்ளாகியுடன் பயந்து அலறத் தொடங்கினர். ஆனால் சாரதி அதிவேகத்துடன் பஸ்ஸைச் செலுத்திவந்துவிட்டார்.

இதேவேளையில் அந்த வீதியால் பயணம் செய்த மின்விய பாரிகள் இருவர் இந்தக் கண்ணிவெடி வெடித்தபோது தூக்கி எறியப்பட்டதைத் தாம் கண்டதாகவும் பஸ் பிரயாணிகள் பலர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து முல்லைத்தீவு — மாங்குளம் வீதியின் போகுவரத்துக்கள் தடைப்பட்டன. (ஒ-9)

## ஓவியர் செல்வா காலமானர்

யாழ்ப்பாணம்' ஜூலை 25 ஓவியரும் ஆசிரியருமான திரு. மாணிக்கராசா செல்வகுருநாதன் நேற்றுக் காலமானர்.

இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சித்திர ஆசிரியராகக் கடமையாற்றியவர்.

உதயன் ''முச்சந்தி முரளி'' ஓவியம் அவரது கைவண்ணமே. ஹாஸ்ய சேலிச் சித்திரங்கள் மூலம் ஈழத்தமிழ்ப் பத்திரிகை உலகில் திரு. செல்வா பிரபல்யம்பெற்றிருந்தார்.

## ஈழத் தமிழர்..

(1ம்பக்கத் தொடர்ச்சி) கணக்கானவர்கள் விண்ணப்பிக்கின்றனர் என்றும் —

எதிர்வரும் செப்டம்பர் மாத நடுப்பகுதி வரையான விமானப் பயணத்துக்கு 'ரிசேர்வ்' செய்தல் பூர்த்தியாகி விட்டது என்றும் —

விசாக் காலத்தைக் குறைப்பதற்கு அதுவும் ஒரு காரணம் என்றும் — மேலும் கூறப்படுகிறது

முன்னர் இந்தியா செல்லும் பயணிகளுக்கு 3 மாதங்களுக்குத் தாராளமாக விசா வழங்கப்பட்டு வந்தது. அது பின்னர் ஒரு மாதமாக குறைக்கப்பட்டு தற்பொழுது 15நாட்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது.

எனினும் இந்தியாவில் படிப்பைத் தொடர விரும்பும் ஒருவர் அங்குள்ள பாடசாலை அனுமதி அட்டையை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவருக்கு ஒரு வருட விசா வழங்கப்படுகிறது.(அ-9)

## மரண அறிவித்தல்

### திரு. எம். செல்வகுருநாதன்

(ஆசிரியர் யாழ். இந்துக்கல்லூரி)

யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் எம். செல்வகுருநாதன் 24 - 7 - 88 அன்று காலமானர். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஆசிரியர் கழகம்
யாழ். இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் சிவக்கொழுந்து

(குப்பிளான்)

குப்பிளானைச் சேர்ந்த இராமலிங்கம் சிவக்கொழுந்து காலமாகி விட்டார் இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், இராசதுரை (யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவன்) தெட்சணாமூர்த்தி (கிராம சேவையாளர் மயிலிட்டி தெற்கு) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (25-7-88) பிற்பகல் 1 மணி அளவில் அவரது குப்பிளான் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்:
S. இராசதுரை, S. தெட்சணாமூர்த்தி
(5283)

### நாகேந்திரம் நடராசா

(இன்ஜினியர் - லண்டன்)

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த நாகேந்திரம் நடராசா 22-7-88இல் லண்டனில் காலமானர். இவர் இராஜ யோகேஸ்வரி (கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த ஆறுமுகம் நல்லமுத்துவின் மகள்) யின் அன்புக் கணவனும், திருக்குமார் (லண்டன்) திருச்செந்தில் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் மரணக் கிரியைகள் லண்டனில் நடைபெற்றன. அன்னாரின் கோண்டாவில் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படுகின்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் இத் தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
N. விக்னராஜா
'அருந்ததி இல்லம்'
பலாலி றோட்.
கோண்டாவில் கிழக்கு (5284)

### கந்தையா கனகரெட்ணம் B. A.

(உதவி முகாமையாளர்,
மக்கள் வங்கி-கன்னாதிட்டிக் கிளை)

திரு. கந்தையா கனகரெட்ணம் அவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர் வண்ணார்பண்ணை ஓட்டுமடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. கந்தையாவினதும், திருமதி பாக்கியத்தின் அன்புப் புதல்வனும் திருமதி ரெட்ணவதி (ஆசிரியை யாழ். இந்துக்கல்லூரி ஆரம்பபாடசாலை) அவர்களின் அன்புக்கணவரும், ரெட்ணதீபன் (மாணவன், கொக்குவில் இந்துக்கல்லூரி) அவர்களின் அருமைத் தந்தையும், பூரணம், இராசமணி, ஆனந்தராசா (V. M. Bros - கொழும்பு) இராசேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற திரு. M. சிமியாம்பிள்ளை (முன்னாள் - வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்) திருமதி ஜெயமணி சிமியாம்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 25 - 7 - 88 திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ஆனந்தராசா
14/2, ஓட்டுமடம் றோட்,
யாழ்ப்பாணம். (5135)

### திரு. வன்னித்தம்பி குமாரசாமி

(ஓய்வுபெற்ற Production Manager உப்புக் கூட்டுத்தாபனம்)

சுழிபுரத்தைச் சேர்ந்த திரு. வன்னித்தம்பி குமாரசாமி காலமானர். இவர் சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற வன்னித்தம்பி - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லப்பா - சுந்தரம்மாவின் அன்பு மருமகனும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி செல்வராணி, சிவசெந்திநாதன், இராஜேந்திரா (Engineer U.K), யோகேந்திரா (Engineer Lanka Cement Ltd), விமலராணி, வசந்தராணி, ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுஜா (U.K), யசோதா ஆகியோரின் அன்பு மாமனாரும், ரகு அரவிந், கங்கஜானகி ஆகியோரின் அன்புப் பேரனும், பொன்னம்மா, தங்கம்மா, காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை (Rtd. Ex. Inspector), கிருஷ்ணபிள்ளை (Rtd., Inspector of Police) ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோகேந்திரா
சுழிபுரம். (5138)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 25-07-1988ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது, Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Monday 25th July 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org